ISSN 1391-9504

PUBLIC LIBRARY
SPECIAL COLLECTION
Price Rs. 20.00
ரூ 20.00




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள விஜய்

## 'விஜய்' பத்திரிகையை சத்தமாக வாசிக்கச் சொல்லும் அப்பா!

எனது அப்பா வாரம் தவறாமல் 'விஜய்' பத்திரிகை வேண்டித் தருவார். நாங்கள் 'விஜய்' பத்திரிகையின் ரசிகர்கள். நான் 'விஜய்' பத்திரிகையில் சிங்களம் படிக்கின்றேன். எனது தம்பிக்கு சின்னச் சின்னக் கதைகளை வாசித்துக் காட்டுவேன். பாய்மரப்படகு திரில்லாக இருக்கின்றது. கார்ட்டூன் கதைகள் தம்பிக்கு மிகவும் விருப்பம். அறிவுரைகள் சில எனும் பகுதியை அப்பா சத்தமாக வாசிக்குமாறு தம்பியிடம் சொல்லுவார்.

சா.ஜெபதக்சிகா, சா.ஜெபதக்சிகன்

****

புன்னகை மலராய்<br>
புதுப்புது அம்சங்களுடன்<br>
புத்தாண்டில் விழித்தெழுந்த<br>
விடியலின் விஜய்யே!<br>
நான்காவது வயது<br>
நிறைவு பெற்று<br>
ஐந்தாவது வயதில் காலெடுத்து வைத்துள்ள<br>
உனது சேவைகள் வளர<br>
என் வாழ்த்துக்கள்

எஸ்.எம்.அஹமட், ஏறாவூர்-01.

****

எங்கள் அபிமான 'விஜய்' பத்திரிகையில் அண்மைக்காலமாக நீங்கள் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளீர்கள். நன்றி. இதில் மழலை மாறாத பிள்ளைகளின் இனிய கதைகள் குறைக்கப்பட்டிருப்பது குழந்தைகளை கவலை கொள்ளச் செய்துள்ளது. மாணவர் ஆக்கங்கள் குறைந்துள்ளமை குட்டி எழுத்தாளர்களின் திறமையை வரம்பிட்டுள்ளது.

ஒவ்வொரு வகுப்புக்குமான பாடத்திட்டங்களை அறிந்து அவற்றை இலகுவாக முன்னெடுக்கக் கூடியவாறான கட்டுரைகளை அதிகம் தருமாறும் அன்பாய் வேண்டிக் கொள்கிறேன்.

எம்.எல்.லாஸிம், அக்கரைப்பற்று-01.

****

மாணவர் ஆக்கங்கள் பகுதியில் 'உன் ஒவ்வொரு...' எனும் தலைப்பில் சி.கயூபன் அம்பலவன், பொக்கனை என்பவரால் எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருந்த கவிதை வேறொரு பத்திரிகையில் என்னால் எழுதப்பட்ட கவிதையாகும். இனிவரும் ஆக்கங்களில் சொந்த ஆக்கங்கள் என்பதை உறுதிப்படுத்தி அனுப்புமாறு வாசகர்களை அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

எப்.றிஸ்வானா, இறக்குவானை.

****

வாழ்க விஜய்! வளர்க விஜய்!<br>
எமது அறிவைத் தூண்டும் நல்ல<br>
விஜய்! எமக்கு புதிய விடயங்களை<br>
தந்து எமது அறிவை<br>
மேலும் மேலும் வளர்க்கும் விஜய்!<br>
நீ பல்லாண்டு காலம்<br>
வாழ்ந்து வளர்க விஜய்!

பாத்திமா ரிகாசா, தரம் - 9,<br>
நிக/முஸ்லிம் ம.கல்.,நிகவரடிய.

அன்பின் விஜய்யே!

தற்போது உன்னில் சுமந்து வரும் அனைத்து விடயங்களும் க.பொ.த சாதாரண தர மாணவர்களாகிய எமக்கு புதிய பாடத்திட்டத்திற்கு அமைய 'வரலாறு' என்ற பாடத்திற்கு மிகவும் பிரயோசனமாக உள்ளது.

எம்.வை.எம்.சிப்னா, தரம் - 11C,<br>
மாறை/அறபா தே.பாட., வெலிகம.

நான் 9 ஆம் தரத்தில் கல்வி கற்று வருகிறேன். நான் பாடங்களிலும் கூடிய கவனம் செலுத்துகிறேன். அது போல் 'விஜய்' பத்திரிகையும் தவறாமல் வாங்கிப் படிக்கிறேன்.

றிஸ்கான், புத்தளம்.

விஜய்யே! நீ புதன்தோறும் புத்துணர்ச்சி தரும் புதிய தகவல்களை வழங்குகின்றாய். அறிவை வாரி வழங்குவதில் நீ வள்ளல். விளையாட்டுப் பற்றிச் சொல்வதில் நீ வீரன். விஞ்ஞானம், விண்வெளித் தகவல்களைத் தருவதில் நீ ஓர் விஞ்ஞானி. மொத்தத்தில் நீ ஒரு மேதை.

விஜய் வாசகன்

அன்புள்ள விஜய்,<br>
ஆசிரியர்,<br>
த.பெ.எண். 2037,<br>
கொழும்பு.

# புராதன நகரில் பிரமாண்ட ஆலயம்



கம்போடியாவில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள புராதன நகரம் மற்றும் பிரமாண்டமான ஆலயம் தொடர்பாக பல வியப்புக்குரிய தகவல்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

அங்கோர் வட் (Angkor wat) என்னும் இந்த ஆலயம் கம்போடியாவில் அமைந்துள்ளது. புராதன கால நகரமான அங்கோரில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான ஆலயத்தின் ஒரு பகுதியே இந்த ஆலயம் என்று தெரியவந்துள்ளது. இந்த அங்கோர் நகரம் முன்னர் நினைத்ததை விட மிகப் பெரிய அளவுடையது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

செய்மதியின் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள் பூமிக்கு அடியில் புதைந்து போயுள்ள அழிவுகளைப் பற்றித் தெரிவிக்கின்றன. இதன்மூலம் பாதைகள், கால்வாய்கள் உட்பட 70க்கும் மேற்பட்ட ஆலயங்களைப் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் புராதன நகரமானது 1000 கிலோமீற்றர் (400 சதுர மைல்) வரை பரந்துபட்டு இருந்ததென்றும் அளவில் லண்டன் பிரதேசத்தை ஒப்பிடக்கூடியதென்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நகரில் வாழ்ந்த மக்கள் தொகையை குறிப்பிடுகையில் அது சுமார் 10 லட்சத்தை நெருங்கும் அளவில் இருந்திருக்குமென்றும் நம்பப்படுகின்றது.



இந்நகரில் வாழ்ந்த மக்கள் கமெர் (Khmer) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் இந்து சமயத்தையே பின்பற்றி உள்ளனர். காலப்போக்கில் இங்கு ஒரு புதிய அரசர் பௌத்த சமயத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

புதிய கண்டுபிடிப்புக்கள் இந்த ரகசியங்களை வெளிஉலகத்துக்குக் கொண்டுவந்துள்ளன. இந்தக் குடியேற்றமானது மிகப் பிரமாண்டமான அளவுக்கு வளர்ந்தமையால் அங்கு பூமி அரிப்பு தண்ணீர் நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாகியுள்ளது. இதுவே இந்த புராதன நகரம் அழியக் காரணமாக இருந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அடுத்த நானூறு ஆண்டு காலப்பகுதியில் இந்தப் புராதன நகரம் அடர்ந்த காடுகளால் முற்றாக மூடப்பட்டு அந்த நகரம் இருப்பதே தெரியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

1860 ஆம் ஆண்டு பிரித்தானிய தொண்டர் அமைப்பு ஒன்று இதனைக் கண்டுபிடிக்கும்வரை இது ஒரு புதைந்து போன ரகசியமாகவே இருந்துள்ளது.

# இந்தியாவின் மாநிலங்கள்




எமது அயல் நாடான இந்தியா உலகின் புகழ்பெற்ற ஜனநாயக நாடுகளில் ஒன்று. இன்று ஏறக்குறைய 110 கோடிக்கு மேல் சனத்தொகையைக் கொண்டு விளங்குகின்றது. மொழிவாரியான மாநிலங்களைக் கொண்ட சமஷ்டி ஆட்சி முறை இங்கு நிலவுவது முக்கிய அம்சமாகும். எமது அயல்நாடாக இருப்பதால் அதன் மாநிலங்களின் பெயர்கள் அடிக்கடி எமது ஊடகங்களில் அடிபடுவதுண்டு. எனவே, இந்தியாவின் மாநிலங்கள் எத்தனை? அவற்றின் பெயர்கள் என்ன? என இயல்பாகவே கேள்விகள் எழலாம். (சுதந்திரத்திற்குப் பின்) அண்மைக்காலம் வரை இந்தியாவின் மாநிலங்களின் தொகை 25 ஆகவே இருந்தது. இவற்றில் 18 மாநிலங்களாகவும் 07 யூனியன்





பிரதேசங்களாகவும் இருந்தன. ஆனால், இன்று இந்தியாவின் மொத்த மாநிலங்களின் தொகையோ 35 ஆகும். மேலும், ஒரு விடயத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும். மொழிவாரி மாநிலங்கள் என்றும் அவற்றின் தொகை 35 என்றும் குறிப்பிடும் பொழுது இந்தியாவில் வெறும் 35 மொழிகள்தான் பேசப்படுகின்றதா? என்ற கேள்வியும் எழலாம். அதுதான் இல்லை. இன்று இந்தியாவில் ஏறக்குறைய 5860 மொழிகள் பேசும் மக்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு மொழியினரும் ஒரு சில நூறில் இருந்து கோடிக்கணக்கானவர்கள் வரை தொகையில் வேறுபடுகின்றனர்.




இனி மாநிலங்களின் பெயர்களைப் பார்ப்போம்.

01. ஆந்திராப் பிரதேசம்
02. அருணாச்சலப் பிரதேசம்
03. அந்தமான் நிக்கோபார் தீவுகள்
04. அசாம்
05. பிகார்
06. சண்டிகர்
07. சாட்டிஸ்கர்
08. தந்ரா நாகர் ஹவேலி
09. தமான் தியு
10. டில்லி
11. கோவா
12. குஜராத்
13. ஹரியானா




14. ஹிமாச்சல் பிரதேஷ்
15. ஜம்மு காஷ்மீர்
16. ஜர்கண்ட்
17. கர்நாடகா
18. கேரளா
19. லட்சத்தீவு
20. மத்தியப் பிரதேசம்
21. மகாரஷ்டிரா
22. மணிப்பூர்
23. மேகலாயா
24. மிசோரம்
25. நாகலாந்து
26. ஒரிசா
27. பாண்டிச்சேரி
28. பஞ்சாப்
29. ராஜஸ்தான்
30. சிக்கிம்
31. தமிழ்நாடு
32. திரிபுரா
33. உத்தரப் பிரதேசம்
34. உத்தரஞ்சல்
35. மேற்கு வங்காளம்

J.A.லீபாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009-முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதித்தல்:

# விண்ணப்பங்கள் ஜூன் 1 ஆம் திகதி தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படும்



அடுத்த ஆண்டில் (2009) முதலாம் தரத்திற்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்காக எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பிள்ளைகளை சேர்த்துக் கொள்வதற்கான விதிமுறைகளுக்கு அமைய அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதோடு அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன் சட்டரீதியான அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்தில் பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான புதிய செயற்றிட்டங்களுக்குள் பிள்ளையின் அறிவாற்றலை சோதிக்கும் முறை இடம்பெறவில்லை என்றும் ஆனால், பாடசாலையிலிருந்து வதிவிடத்திற்குள்ள தூரம், பழைய மாணவர், சகோதரர்கள் கல்வி கற்றல், அரச சேவை இடமாற்றம், கல்வி மற்றும் கல்விச் சேவை, வெளிநாட்டிலிருந்து இடம்பெயர்ந்திருத்தல் போன்ற அடிப்படை விதிமுறைகள் கருத்தில் கொள்ளப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உடற் பருமனைக் குறைக்க உப்பு சேர்ப்பதைக் குறையுங்கள்



உப்பு சேர்க்கப்பட்ட உணவு வகைகளை அதிகம் உட்கொள்ளும் பிள்ளைகள் இனிப்புப் பானங்களை அதிகளவில் பருகுவதாகவும் இதனால், பிள்ளைகளின் உடற்பருமன் கூடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பிள்ளைகள் தாம் உண்ணும் உணவில் சேர்க்கப்படும் உப்பின் அளவை சற்றுக் குறைப்பதனூடாக தாம் அருந்தும் இனிப்புப் பானங்களின் அளவும் குறையுமென பிரித்தானிய ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாளொன்றுக்கு உட்கொள்ளும் உப்பின் அளவை 3 கிராமாகக் குறைக்கும் பிள்ளைகள், தாம் அருந்தும் இனிப்புப் பானங்களின் அளவை வாரமொன்றுக்கு 2 கேன்கள் அளவில் குறைத்து அருந்துவார்கள். இதனடிப்படையில் அவர்கள் வாரத்திற்கு எடுக்கும் கலோரியின் அளவு 250 ஆகக் குறையும் எனவும் கூறப்படுகின்றது.

உப்பு, கூடுதலாக உட்கொள்ளப்படுவதனால் தாகம் அதிகரிப்பதாகவும் தாக சாந்திக்காக நீரை அருந்துவதைத் தவிர்த்து இனிப்புப் பானங்களை அருந்துவதையே பிள்ளைகள் வழக்கப்படுத்தியிருப்பதோடு விரும்பவும் செய்கின்றனர்.

2050 ஆம் ஆண்டளவில் பிள்ளைகளில் 1/4 பகுதியினர் உடற்பருமன் கூடியவர்களாக இருப்பார்கள் எனவும் அத்துடன் அவர்களில் சிலர் இரண்டாம் நிலை நீரிழிவு, இதய மற்றும் புற்றுநோய்களினால் பாதிக்கப்படக்கூடும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.





அமெரிக்காவில் இதய நோய் தொடர்பாக வெளியாகும் சஞ்சிகையொன்றில் வெளியான தகவலொன்றின்படி நாளொன்றுக்கு பாவிக்கும் உப்பின் அளவில் 1 கிராமைக் குறைப்பதால் அருந்தக்கூடிய இனிப்புப் பானமும் நாளொன்றுக்கு 27 கிராமால் குறையுமெனத் தெரிவித்துள்ளது. இந்த ஆய்வுக்காக 4 வயதுக்கும்-18 வயதுக்கும் இடைப்பட்ட 2000 பிள்ளைகள் உட்படுத்தப்பட்டுள்ளனர். மருத்துவ அறிக்கைகளின்படி ஒரு வயது மற்றும் 3 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் நாளொன்றுக்கு 2 கிராமிற்குக் கூடிய அளவு உப்பு உணவில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது என்று தெரிவித்துள்ளது. அவ்வாறே, 4-6 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் 3 கிராமுக்கும், 7-10 வயதுக்கிடைப்பட்டவர்கள் 5 கிராமுக்கும், 11 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் நாளொன்றுக்கு 6 கிராமுக்கும் மேலதிகமான உப்பை உணவில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# சட்டக்கல்லூரி நுழைவுக்கு விண்ணப்பம் கோரல்

2009 ஆம் ஆண்டில் இலங்கை சட்டக் கல்லூரியில் அனுமதி பெற விரும்பும் தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்கத் தகுதியுடைய மாணவர்கள் மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை இலங்கை சட்டக்கல்லூரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் நுழைவுப் பரீட்சை செப்டெம்பர் மாத ஆரம்பப் பகுதியில் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Vijey விஜய

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
பெக்ஸ்: 2479688

## மூன்றரை மாதங்களுக்குள்

# 41 பேர் எலிக்காய்ச்சலால் பலி!

எலிக்காய்ச்சல் (லெப்டொஸ்பைரோஸிஸ்) நோயினால் பாதிக்கப்பட்டு கடந்த மூன்றரை மாதங்களுக்குள் 41 பேர் மரணித்திருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப்பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த இக்காலப்பகுதிக்குள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 900 இற்கும் அதிகமான எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் மரணித்தவர்களில் அதிகமானோர் விவசாயிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை, பொலன்னறுவை, கம்பஹா, மாத்தறை, கேகாலை, களுத்துறை மற்றும் காலி போன்ற மாவட்டங்களிலிருந்தே அதிக நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எலிகளால் மாத்திரமன்றி, மாடு, ஆடு, நாய் மற்றும் பூனை போன்ற விலங்குகளின் சிறுநீரினூடாக வெளியேற்றப்படுகின்ற நோய்க் கிருமிகள் வயல்வெளிகள், சதுப்பு நிலங்கள் மற்றும் பண்ணைகளின் ஊடாகப் பரவிவருகின்றன. இதனால், உடம்பில் சிறுகீறல், காயங்கள் இருப்பின் அவற்றினூடாக குறித்த நோய்க்கிருமிகள் உடலுக்குள் செல்வதாகவும் கூறப்படுகின்றது. இதனால்தான் எலிக்காய்ச்சல் ஏற்படுவதாக வைத்தியர் மேலும் தெரிவித்தார்.



காய்ச்சல், தலைவலி, தசைகளில் வேதனை, கண் சிவப்பாதல், வாந்தி என்பன இந்நோய்க்குரிய அறிகுறிகளாகும். நோய் பரவிவரும் பிரதேசங்களில் வாழ்பவர்களின் கண்கள் மஞ்சள் நிறமாதல், குறைந்தளவு சிறுநீர் வெளியேற்றம், சிறுநீர் நிற மாற்றம் மற்றும் மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் இனங்காணப்பட்டவுடன் தாமதிக்காமல் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அப்பிரதேசங்களில் வாழும் ஏனையவர்களுக்கு நோய் தொற்றாது முன்கூட்டியே தடுத்துக் கொள்வதற்கான மருந்துகளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியை சந்தித்துப் பெற்றுக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விஜய் - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இணைந்து வழங்கும்

தாயக்கட்டையைக் கொண்டு விளையாடும் 'லூடோ' அட்டையை இந்த இதழுடனும் பெற்றுக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியின் தந்தை




நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்சத்தை கணினிகள் ஆக்கிரமித்துள்ளன. இன்று எமது சகல அலுவல்களுக்கும் கணினி உதவுவதால் அலுவல்கள் இலகுவாகியுள்ளன. கணினிகளின் வரலாறு இரண்டாம் உலகப்போர் வரை நீண்டு செல்கின்றது. இந்த நவீன தொழில்நுட்பத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் அலன் டியுரின் ஆவார். அவரே கணினியைக் கண்டுபிடித்தவராவார்.

கணினியின் தந்தை என்றழைக்கப்படும் அலன் மட்சன் டியுரின் 1912 ஜூன் மாதம் 07 ஆம் திகதி இங்கிலாந்தில் பிறந்தார். அவர் சிறு வயது முதலே கல்வியில் ஆர்வம் காட்டி வந்ததோடு கணிதம் மற்றும் மறைந்துள்ள நுட்பங்களை கண்டுபிடிப்பதில் திறமைசாலியாக இருந்தார். அவர் ஆரம்பக் கல்வியை சென்மேரிஸ், ஷெபோர்ன் ஆகிய கல்லூரிகளில் கற்றார். ஆரம்ப அறிவே இல்லாமல் கணிப்பீடுகளைச் செய்து வித்தியாசங்களைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டினார். அந்தப் பயிற்சி காரணமாகப் பெரிய கணக்குகளைச் செய்து சிக்கல்கள், குழப்பங்களை இலகுவில் தீர்க்கும் ஆற்றலைப் பெற்றுக் கொண்டார்.




1931-1934 ஆம் ஆண்டு வரையில் கேம்பிரிட்ஜ் கிங்ஸ்' பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற அவர், அங்கு பட்டப்படிப்பை நிறைவு செய்தார். இக்காலப்பகுதியில் 'டியுரின்' என்ற இயந்திரத்தை (Turin Machine) கண்டுபிடித்தார். 1937-1938 காலப்பகுதியில் 'பிரின்ஸ்டன்' பல்கலைக்கழகத்தில் பட்ட மேற் கல்வியை பூர்த்தி செய்தார்.

இரண்டாம் உலகப்போர் காலப் பகுதியில் தகவல் பரிமாற்றத்திற்கு பயன்பட்ட இரகசியக் குறியீட்டை அவரே அறிமுகம் செய்தார். 1938 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த இரகசியக் குறியீட்டைப் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டார். அவரின் இந்தப் பணி போர்க்காலத்தில் பெரிதும் பயன்பட்டது. எதிரிப் படைகளுக்குப் புரியாதபடி தகவல் பரிமாற்றம் இலகுவாகியது.



அதனைத் தொடர்ந்து கணக்கியல் கணிப்பீடுகளில் நிலவிய சிக்கல்களை இலகுவில் தீர்த்துக் கொள்ளக் கூடிய 'பொம்பே' (Bombe) என்ற கருவியைக் கண்டுபிடித்தார். இதனால், உலகம் கணிதத்துறையில் சிக்கல்களை இலகுவாக தீர்த்துக் கொள்ளும் வசதியைப் பெற்றுக் கொண்டது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவில் உலகம் முழுவதும் 200 கருவிகள் அளவில் பாவனையில் இருந்தன.

***இரண்டாம் உலகப்போர் காலப்பகுதியில் தகவல் பரிமாற்றத்திற்கு பயன்பட்ட இரகசியக் குறியீட்டை அவரே அறிமுகம் செய்தார்.***

இவ்வாறு இரண்டாம் உலகப் போர் காலப்பகுதியில் அவர் இங்கிலாந்திற்கு ஆற்றிய பணி அந்நாட்டின் போர் நடவடிக்கைகளுக்குப் பெரிதும் கைகொடுத்தது. அதனால், அவர் 'ஒபே' (Obe) என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்ததோடு அவர் இயல்பான மதிநுட்ப விஞ்ஞானப் பயன்பாட்டை ஒத்த (Artificial Inteligence) கருவியைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டார். பல்வேறு கோணங்களில் ஆய்வுகளையும் பரிசோதனைகளையும் மேற்கொண்டார். இந்தப் பரிசோதனையானது இன்றும் 'டியுரின்' பரிசோதனை (Turing test) என்றழைக்கப்படுகின்றது.

1952 ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரையில் கணிதவியல் உயிரியல் (Mathamatic Biology) துறை தொடர்பாக அதிக அக்கறை செலுத்தினார். அவரின் இத்தகைய முயற்சிகள் கணினிகள் உருவாக்கப்படுவதற்கான அடிப்படையாக அமைந்தன. இருந்தபோதும் அவரின் நடத்தை குறித்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இவர் 1954 ஆம் ஆண்டு 'சயனயிட்' கலந்த அப்பிள் பழம் ஒன்றை உண்டு தமது உயிரை மாய்த்துக்கொண்டார்.

### மரணத்தின் பின்னர்

1966 ஆம் ஆண்டு அவருக்கு கணினி தொழில்நுட்பத்திற்கான சங்கம் (Association for Com puting Machinery) கணினிகளில் வடிவமைப்புக்கு அவரின் கண்டுபிடிப்புகள் அடிப்படையாக அமைந்தன என்ற காரணத்திற்காக அவருக்கு மிகப்பெரிய கௌரவம் வழங்கி அவரது புகழை உலகறியச் செய்தது. இந்த 'டியுரின்' விருது நோபல் பரிசாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. 1994 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மென்சஸ்டர் நகரில் வீதியொன்றும் 'டியுரின்' வீதி என்று பெயர் சூட்டப்பட்டது.

'பியுடோரிகா' பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞான ஆய்வுகூடம் டியுரினின் பெயரிலே அமைக்கப்பட்டிருக்கின்றது.

# செத்தும் கொடுத்த சீதக்காதி

'செத்தும் கொடுத்தார் சீதக்காதி' என்ற பழமொழி பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தப் பழமொழி எப்படி வந்தது தெரியுமா?

மனிதர்களின் வறுமையைப் போக்க பொருள் வழங்கும் வள்ளல்கள் உண்டு. பறவையின் குளிர் நீங்க போர்வை அளித்த வள்ளல்கள் உண்டு. கொடியின் வேண்டுதலுக்காக தன் தேரையும் பொருள்களையும் வழங்கிய வள்ளல்களும் உண்டு. அந்த வரிசையில் செடியின் வேண்டுதலுக்காக பொற்காசினை வைத்த வள்ளல்தான் சீதக்காதி.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் ராமநாதபுரம் மாவட்டம் ராமநாத சுவாமி கோவிலைக் கட்ட உறுதுணையாக இருந்தார். கீழக்கரையில் உள்ள ஜும்மா மசூதியிலும் ராமநாத சுவாமி கோவிலிலும் உள்ள தூண்கள் மத வேற்றுமையின்றி ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



ஔரங்கசீப்பின் அரசப்பிரதிநிதியாகவும் ராமநாதபுர அரசன் கிழவன் சேதுபதியின் அமைச்சராகவும் வேலை பார்த்த இவர், பின்பு கடல் வாணிபத்திலும் முத்துக் குளிப்பதிலும் சம்பாதித்த சொத்துக்களையெல்லாம் வறுமையில் வாடியவர்களுக்கும் பாடித்திரிந்த புலவர்களுக்கும் பாவாணர்களுக்கும் வாரிவாரி வழங்கிய வள்ளலானார் சீதக்காதி.

கீழக்கரையில் பெரியதம்பி மரிக்காயருக்கும், பாத்திமாவுக்கும் மகனாகப் பிறந்த காதர் என்ற பெயர் கொண்டவர்தான் சீதக்காதி. ஒரு சமயம் காட்டுவழியே மாலை நேரத்தில் நடந்து சென்று கொண்டிருக்கும்போது எள் செடியொன்று காற்றில் ஆடிக் கையேந்துவது போன்று இலையின் செயல் இருந்ததை அறிந்த சீதக்காதி, எள் செடி இலையின் மீது பொற்காசினை வைத்து விட்டுச் சென்றார்.

உயிரோடு இருந்த போது மட்டுமல்ல, இறந்த பின்பும் வாரி வழங்கிய வள்ளல் அவர். இஸ்லாமிய மதத்தவராயிருந்தாலும் ராமேஸ்வரம் தன் மரணத்திற்கு பின்பும் தன்னை நாடிவரும் புலவர்களுக்கும் வறுமையில் வாடி வருவோர்களுக்கும் பொன்னையும் பொருளையும் வாரி வழங்குமாறு கட்டளையிட்டிருந்தார்.

சீதக்காதி இறந்த பின்பும் அவர் சொன்னபடியே அவரது குடும்பத்தினர் பொன்னையும் பொருளையும் அளித்து உதவி செய்து வந்தனர். அதனால் தான் செத்தும் கொடுத்தார் சீதக்காதி என்று இன்றும் அழைக்கப்பட்டு வருகிறார். சீதக்காதி மறைந்த பின்பும் அவருடைய புகழை பாடிக் கொண்டேயிருந்தனர்; இருக்கின்றனர்; இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ௨௦15ஆம் ஆண்டளவில் நிலவில் 'மேரிகோல்ட்' பூக்களை வளர்க்கலாம்?

ஐரோப்பிய விண்வெளி அமைப்புடன் இணைந்து உக்ரைன் நாட்டு விஞ்ஞானிகள் நிலவில் பயிர் செய்யலாமா? என்பது குறித்து ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இந்த ஆராய்ச்சியில் சர்வதேச நிலவு ஆராய்ச்சிக் குழுவின் இயக்குனரும், ஸ்மார்ட்-1 விண்கல ஆய்வின் தந்தை என வர்ணிக்கப்படுபவருமான பேர்னார்ட் போயிங் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இவர், அண்மையில் வியன்னா நகரில் நடந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் இது குறித்து ஆய்வறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையிலேயே 2015 ஆம் ஆண்டளவில் நிலவில் மேரிகோல்ட் தாவரங்களை வளர்க்கலாம் என்பது குறித்து அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது;


நாம் நிலவின் மேற்பரப்பில் காணப்படுவது போன்ற பாறையொன்றை உருவாக்கி அதில் மேரிகோல்ட் பூக்களை வளரச் செய்தோம். அதன் வளர்ச்சிக்காக நாம் எந்தவொரு உர வகைகளையும் இடவில்லை. எனினும், இந்தப் பாறைகளில் மேரிகோல்ட் தாவரம் வளர்ந்து நன்றாகப் பூத்துக் குலுங்கியது.

இந்தத் தாவரம் நிலவில் காணப்படும் கடுமையான வறட்சி நிலையையும் தாங்கி வளரக்கூடியதாகும். இதற்காக நாங்கள் பயன்படுத்திய பாறையில் பயிரிடப்பட்ட மேரிகோல்ட் தாவரத்தின் வளர்ச்சிக்கு பொற்றாசியம் போன்றதொரு பக்றீரியா புளிக்க வைத்துப் பயன்படுத்தப்பட்டது. தவிர, வேறு எந்த உரமும் தாவர வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படவில்லை. எமது முயற்சி வெற்றியளித்துள்ளமையால் நிலவிலும் பயிர்ச்செய்கை செய்யலாம் என்ற நம்பிக்கை வலுப்பெற்றுள்ளது என்றார்.

2015 ஆம் ஆண்டளவில் நிலவிற்கு அனுப்பப்படவுள்ள ஐரோப்பிய விண்வெளிக்கலத்தின் மூலம் நிலவின் மேற்பரப்பில் இறங்கி செயல்படக்கூடிய ஊர்தி ஒன்றும் அனுப்பப்படவுள்ளது. அந்த ஊர்தி மூலம் மேரி கோல்ட் தாவரம் நிலவில் பயிரிடப்படும். அவ்வாறே, டியுலிப் மலர்கள், முட்டைக்கோஸ், அரபிடோபிஸ் விதைகள் போன்றவற்றையும் நிலவில் பயிரிட உத்தேசித்துள்ளதாக பேர்னார்ட் போயிங் மேலும் தெரிவித்தார்.

## சனியின் துணைக்கோளில் உயிர் வாழலாமாம்

சனிக்கிரகத்தை சுற்றி வரும் துணைக்கோளான 'என்சிலாடஸ்' இல் உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான நீர், வெப்பம் மற்றும் வேதிப்பொருட்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




சனிக்கிரகத்தை பல துணைக் கோள்கள் சுற்றி வருகின்றன. இதில் 'என்சிலாடஸ்' என்ற துணைக்கோளில் உயிரினங்கள் வாழ்வதற்குத் தேவையான நீர், வெப்பம் மற்றும் வேதிப்பொருட்கள் இருப்பதாக அமெரிக்காவின் 'நாஸா' விண்வெளி ஆய்வு மையம் அனுப்பிய 'கெசினி' விண்கலம் கண்டுபிடித்துள்ளது.

இந்த ஆய்வு பற்றி 'கொலராடோ' பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் லோறி எஸ்போசிடோ கருத்துத் தெரிவிக்கையில், 501 கி.மீற்றர் விட்டமுள்ள என்சிலாடஸ் துணைக்கோளின் தென்முனையில் பல வாயு ஓட்டங்கள் உள்ளன. இந்த வாயு ஓட்டங்களை ஆராய்ந்தபோது அதில் அடர்த்தி அதிகமான நீராவி, காபன் டயொக்சைட் , காபன் மொனொக்சைட் இருப்பது தெரியவந்துள்ளது.

இது தவிர, 'மெதேன்' வாயுவும் இருக்கிறதாம். திரவநிலையில் நீர் இல்லாவிட்டாலும் மிக அடர்த்தியான நீராவி கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயிரினங்கள் வாழ்வதற்குத் தேவையான மூன்று அத்தியாவசியப் பொருட்களான நீர், வெப்பம் மற்றும் வேதிப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் சனிக்கிரகத்தின் துணைக் கோளில் உயிர்வாழ்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக கருதப்படுகிறது என்கிறார் லோறி.



சர்வதேச விண்வெளி நிலையம் என்பது விண்ணிலிருந்தவாறு நம் பூமியைச் சுற்றிவரும் ஒரு செயற்கை விண்வெளி நிலையம். இதனை

## பிரபலமான விண்வெளி நிலையங்கள்




'மிர்' (Mir), ரஷ்யாவினால் 1986, பெப்ரவரி 19 இல் கஸகஸ்தானிலுள்ள பைகனூரிலிருந்து பூமியைச் சுற்றி வர விண்ணுக்கு ஏவப்பட்ட ஒரு விண்நிலையம் ஆகும். விண்வெளியில் முதன்முதலில் நிறுவப்பட்ட நீண்டகால தொழிற்பாடுடைய விண்நிலையம் இதுவாகும்.

உலக அமைதியின் சின்னமாக ரஷ்யா இதனை உருவாக்கியது.

'மிர்' என்பது ரஷ்ய மொழியில் சமாதானம் அல்லது அமைதி எனப் பொருள்படும். விண்வெளி வீரர்கள் பூமியிலிருந்து மீள் விண்கப்பலில் பயணம் செய்து, விண்வெளியில் நிரந்தரமாய்க் குடியேற ரஷ்யாவின் இத்திட்டம் வழிகோலியது. ரஷ்ய விண்வெளி ஓடமான 'சோயுஸ்' மூலமாக முதலில் விண்வெளி ஆய்வாளர்கள் பயணம் செய்து, 'மிர்' நிலையத்தோடு இணைக்கப்பட்டு இடம் மாறிக் கொண்டனர். அதன் பின்னர் 'நாஸா'வின் அட்லாண்டிஸ் மீள்விண்ணோடம் 'மிர்'உடன் இணைந்தது.

'மிர்' விண்வெளி நிலையமானது, மார்ச் 23, 2001 வரை இயங்கி பின்னர் புவியின் சுற்று வட்டத்தில் இருந்து விலக்கப்பட்டு தென் பசுபிக் சமுத்திரத்தில் விழுந்தது.

## சர்வதேச விண்வெளி நிலையம் (ISS)

ஆங்கிலத்தில் International Space Station (ISS) என்பர். பூமியிலிருந்து 360 கிலோ மீற்றர் உயரத்தில், வளிமண்டலத்தைத் தாண்டி உள்ள புறவெளியில் 92 மணித்துளிகளுக்கு ஒருமுறை பூமியைச் சுற்றி வருகின்றது. 1998 நொவெம்பரில் நிறுவப்பட்டதிலிருந்து பின் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் சுமார் 37,500 தடவைகளுக்கும் மேலாக உலகைச் சுற்றி வந்துள்ளது.


இந்நிலையத்தை 2010 ஆம் ஆண்டுக்குள் முற்றிலுமாகக் கட்டி முடிக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இதனை இயக்கவும் அதன் பழுது பார்ப்புப் பணிகளுக்காகவும் அங்கு ஆய்வுகளை நடத்தவுமென எப்பொழுதும் இரண்டு பேர் இங்கு தங்கிருப்பார்கள். இந்நிலையத்தை இயக்கத் தேவையான அனைத்து கட்டுமானப் பொருட்கள் முதற்கொண்டு எல்லாவற்றையும் பூமியில் இருந்து விண்வெளி ஓடமொன்றினூடாக எடுத்துச் செல்லவேண்டும்.

பல நாடுகளின் கூட்டு முயற்சியில் இந்த விண்வெளி நிலையம் உருவாக்கப்பட்டு வருகின்றது. அமெரிக்காவின் நாஸா, ரஷ்ய விண்வெளி ஆய்வு நிலையம் , ஐரோப்பிய விண்வெளி நிறுவனம், ஜப்பானிய விண்வெளி ஆய்வு நிறுவனம், கனடா விண்வெளி நிறுவனம் என்பன இணைந்து பங்கு பற்றுகின்றன. இவை தவிர, பிரேசில் விண்வெளி நிறுவனமும் இத்தாலிய விண்வெளி நிறுவனமும் பல்வேறு வழிகளில் உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகள் பற்

## உலகின் பிரதான தீவுகள்






இயற்கை நமக்களித்த அருட்கொடைகள் ஏராளம். சற்று நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். நாம் வாழும் சுற்றுப்புறச் சூழல் எவ்வளவு மாறுதல்களைக் கொண்டுள்ளது? பண்டைய காலம் தொட்டே இந்த அழகிய இலங்கைத் தீவை 'இந்து சமுத்திரத்தின் முத்து' என்று அழைக்கின்றனர். இதற்குக் காரணம் இந்து சமுத்திரத்தில் மிகவும் முக்கியமான கவர்ச்சிகரமான தீவாக எமது நாடு அமைந்திருப்பதேயாகும். அதேபோன்றுதான் உலகம் முழுவதும் இது போன்ற ஏராளமான தீவுகள் உள்ளன.

### தீவு என்றால் என்ன?

சுற்றிலும் நீரால் சூழப்பட்ட நிலப் பரப்பு தீவு என்றழைக்கப்படுகின்றது. அந்த நீர் உவர் நீராக அல்லது நன்னீராக இருக்கலாம். இந்த வரைவிலக் கணத்தைக் கொண்டே சமுத்திரம் அடையாளப்படுத்தப்படுகின்றது. இருந்தபோதிலும் சமுத்திரத்தையும் தீவையும் வேறுபடுத்தி அறிந்து கொள்ள வேறு சாதகமான காரணிகளும் உள்ளன.இதற்கமைய நான்கு புறமும் நீரால் சூழப்பட்ட நிலம் தீவு என்றழைக்கப்படுகின்றது.

### தீவுகள் எவ்வாறு உருவாகின்றன?

கடலின் நடுவில் தீவுகள் உருவாவதற்கு பல காரணங்கள் உள்ளன. பண்டைய காலம் வரை நீண்டுகொண்டு செல்கின்ற காரணிகளுள் ஒன்றாக பனியுகத்தின் கடைசிக்கட்டமாக கடல்மட்டம் உயர்வடைவதால் அதனைச் சூழ இருந்த நிலப்பரப்புக்கள் நீரில் மூழ்கின. நீரில் மூழ்காத பகுதிகளாக உயரமான மலைகள் குன்றுகள் மட்டுமே மிகுதியாக இருந்தன. அம்மலைகளைச் சூழ நீர் தேங்கி இருந்ததால் அவை தீவுகள் என்றழைக்கப்பட்டன.

நோர்வே, ஸ்கொட்லாந்து, பின்லாந்து போன்ற நாடுகள் இவ்வாறு உருவான தீவுகளாக கருதப்படுகின்றன. தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின் படி சிசிலி, ஜப்பான் ஆகிய நாடுகளும் இவ்வாறு உருவாகிய நாடுகளாகவே கருதப்படுகின்றன.

அதேபோன்று, கடலால் சூழ்ந்து மூழ்கியுள்ள உயர்ந்த நிலப்பரப்பு கடலின் நீர்மட்டம் குறைவடையும் போது தீவாக உருவாகின்றது. இவ்வாறு உருவாகின்ற தீவுகளைச் சுற்றி கோரல், முருகைக்கற் பாறைகள் உருவாகி அவற்றின் ஊடாக கடல்தாவர இனங்கள் வளர்ந்து அங்கே தாவரங்கள், மரம் செடிகொடிகள் கொண்ட அழகிய கண்கவர் தீவுகள் உருவாகின்றன.

இவ்வாறு உருவான 4000 தீவுக் கூட்டங்களைக் கொண்ட ஒரு நிலப் பரப்பே மாலைதீவு என்று கண்டறியப்பட்டிருக்கின்றது. பிலிப்பைன்ஸ் நாடும் இவ்வாறு ஆயிரக்கணக்கான சிறிய தீவுகளின் கூட்டமே என்றும் உறுதிப் படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறு உருவாகும் தீவுகள் அல்லது மணல் திட்டுக்களைச் சுற்றி பாறைகள், பல்வேறு விதமான சேர்வைகள் படிகின்றன. அங்கே எரிமலைகள் வெளிப்பட்டு தீப்பிழம்பு வெளியாகி கற்கள் மலைகள் உள்ள தீவுகளும் உருவாகின்றன.

எரிமலைகள் வெடித்துச் சிதறும் போது அதில் இருந்து வெளியாகும் அணுச்சேர்வைகள் ஒன்று திரள்கின்றன. அதே போன்று கடலில் ஆங்காங்கே உருவாகின்ற மணல்திட்டுக்களும் பலம் பெற்று கடல் நீரின் அளவு குறைவடையும்போது சிறிய தீவுகளாக மாறுகின்றன. கலிமுகங்களின் அருகில் நீண்ட காலமாக ஒன்று திரள்கின்ற மணற்குவியல்களாலும் தீவுகள் உருவாகின்றன. கடற்கரையிலும் காற்றுக் காரணமாக மணற் குவியல் குவியலாக அள்ளுண்டு சென்று தீவுகள் உருவாக வழிவகுக்கின்றன. யாழ்ப்பாணத்தில் மணற்காடு (மண்கும்பான்) பகுதியில் இவ்வாறான அமைப்பை அவதானிக்கலாம். பனிப்பாறைகள் காணப்படுகின்ற இடங்களில் கனமான படிவுகள், கழிவுகள் ஒன்று சேர்ந்து நீண்ட காலமாக குவியும்போது அங்கும் தீவுகள் உண்டாகின்றன.

### தீவுகளின் பிரதான பண்புகள்

தீவின் முக்கிய பண்பு அதனைச் சூழ உள்ள கரையோரப் பிரதேசமாகும். ஆனால், அவ்வாறு உள்ள கரையோரம் 20 மீற்றருக்கு அதிகமாக காணப்படுவதில்லை. மலைகள் தீவின் மத்தியில் உருவாகின்றன. சுவாத்திய நிலை நிலப் பரப்பின் தன்மைக்கு ஏற்ப மாறுபடுகின்றன. நிலப்பரப்பு உயர்வாக இருந்தால் முற்றிலும் வேறுபட்ட சுவாத்திய நிலையை காணலாம். கரையோரத்தில் தாவரங்கள் வளர்கின்றன. இந்த தாவரங்கள்




எரிமலைகளால் உருவான தீவுகள்


தீவுக்கூட்டங்களால் உருவான தீவு


முருகைக் கல்


தடை தீவுகள்


சமுத்திரத்தை அண்டிய தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...றி அறிந்து கொள்வோம்



'கடொலான' தாவரம் என்றழைக்கப்படுகின்றது.

அத்தோடு, அளவில் பெரிய தீவுகளில் ஈரவலயக் காடுகளை அவதானிக்கலாம். உயர்வான நிலப்பரப்பு இருக்குமானால் உயரமான மரங்களும் 'பயினஸ்' தாவரங்களும் செழிப்பாக வளர்கின்றன.

பசுபிக் சமுத்திரப் பகுதியில் அமைந்துள்ள தீவுகளின் சுவாத்திய நிலையானது முற்றிலும் வேறுபட்டதாகும். எரிமலைகள் ஏற்பட்டு உருவாகிய தீவுகளின் சுவாத்திய நிலை சாதாரண தீவுகளில் இருப்பதைவிட இன்னும் வேறுபட்டதாகும்.

அத்தோடு மண்வளம் உடையதாக பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலமாக இருப்பதையும் அவதானிக்க முடியும். இத்தீவுகளில் நீர்வளம் காணப்படுமானால் சிறப்பான முறையில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளவும் முடியும்.

பசுபிக் சமுத்திரப் பகுதியில் இவ்வாறு உருவான 25,000 தீவுகள் அளவில் உள்ளன. இவற்றில் 25 தீவுகள் அளவில் நாடுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகக்கூடுதலான நிலப்பரப்பு 12,61,456 சதுர கி.மீற்றர் நிலப்பரப்பு இந்தத் தீவுகளுக்குரியதாகும். இந்தத் தீவுகளுக்குரிய இந்தளவு நிலப்பரப்பை தென் ஆபிரிக்காவுடன் ஒப்பிடுகையில் அப்பிரதேசத்தை விட சற்று கூடுதலானதாகும்.

இந்தத் தீவுகளுக்குரிய நிலப்பரப்பில் 90% த்தை கொண்டிருப்பது நியூஸிலாந்து, ஹவாய், நியுகினி ஆகிய நாடுகளாகும். ஆனால், அவுஸ்திரேலியாவும் இதற்குரியதாக கருதப்பட்டாலும் அந்நாடு தீவு அல்ல என்ற வரையறைக்குள் வருகின்றது.

## செயற்கைத் தீவுகள்

மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற தீவுகள் 'செயற்கைத் தீவுகள்' என்றழைக்கப்படுகின்றன. ஜப்பானின் நாகசாகி நகரில் டெஜிமா இவ்வாறு செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள தீவு ஆகும். நாகசாகி துறைமுகத்தின் பிரதான கப்பல் நங்கூரமிடும் களத்தோடு இந்தத் தீவு இணைக்கப்பட்டிருக்கின்றது.

## சிறப்புத் தீவுகள்

'கலபாகொஸ்' என்ற பெயரில் அறிமுகமாகியுள்ள சிறப்புத்தீவு ஒன்றும் இருக்கின்றது. இந்த தீவு பசுபிக் சமுத்திரத்தில் தென் அமெரிக்க கரையில் இருந்து 1050 கி.மீற்றர் தொலைவில் அமைந்திருக்கின்றது. பரிணாம வாதத்தின் தந்தையாக கருதப்படும் சார்ள்ஸ் டார்வின் அவரது பரிணாம வாதம் பற்றிய ஆராய்ச்சிக்காக தெரிவு செய்தது இந்தத் தீவையாகும்.

அதற்குக் காரணம் அந்தத் தீவில் வாழ்ந்து வருகின்ற உயிரினங்கள் உலகில் வேறு எங்கும் காண்பதற்கு இல்லாதிருப்பதும் வித்தியாசமான செயற்பாட்டைக் கொண்ட உயிரினங்கள் அங்கு காணப்பட்டமையுமாகும் என்று தகவல்கள் கூறுகின்றன.

பல தீவுகளின் கூட்டமாக அமைந்துள்ள இத்தீவு எரிமலைகள் உருவாகியதால் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அத்தோடு இன்றும் 'லாவா' தீப்பிழம்பைக் கக்கிய நிலையில் 1500 மீற்றர் உயரமான எரிமலை வெளியே கிளம்பிய வண்ணம் இருப்பதை இத்தீவில் காணமுடிகின்றமை இதன் சிறப்பம்சமாகும்.

## மிகப்பெரிய தீவு

மிகப்பெரிய தீவாக கிறீன்லாந்து அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. இதன் மொத்த நிலப்பரப்பு 21,70,000 சதுர கி.மீற்றராகும். இந்த நிலப்பரப்பில் 18,34,000 சதுர கி.மீற்றர் நிலப்பரப்பு பனி மலைகளால் மூடப்பட்டதாக உள்ளன. கிறீன்லாந்தின் கரையோரத்தின் மொத்த நிலப்பரப்பு 44,000 சதுர கி.மீற்றர்கள் ஆகும்.

## தீவின் உப பிரிவுகள்

பிரதான தீவுடன் இணைந்ததாக அதற்கு அண்மித்த நிலையில் பிரிவுகள் உள்ளன.

## மேற்கிந்தியத் தீவுகள்

இவ்வாறு பல தீவுகள் ஒன்றிணைந்து கூட்டமாக உள்ள பகுதியே மேற்கிந்திய தீவுகள் என்று அழைக்கப்படுகின்றது. இடத்திற்கு இடம் தரை நிலம், நீர் என்ற அடிப்படையில் இந்த வகைத் தீவுகளைக் காணமுடிகின்றது.

ஹவாய், பஹாமாஸ், கிறீஸ் ஆகிய தீவுகளும் இவ்வகைத் தீவுகளுக்கு உதாரணமாகும்.

முருகைக்கற்களாலும் கோரல் படிவுகளாலும் சூழப்பட்ட இன்னுமொரு வகைத் தீவுகள் உள்ளன. இந்தப் பகுதிக்கு கலப்பு என்று அழைப்பது வழக்கமாகும். கடலின் நடுப் பகுதியில் இவ்வாறு ஏற்பட்டு கலப்பு காலம் செல்லச் செல்ல அவையும் தீவுகளாகின்றன.

## தடைத் தீவுகள்

இவ்வாறான தீவு அமைப்பு உருவாவதால் பிரதான நிலப்பரப்பிற்கு கடல் அலைகளால் ஏற்படும் பாதிப்பில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கின்றது. இவ்வாறான தீவுகள் நீளமானதாக இருக்கும். கடலுக்கு சமாந்தரமாக அமைந்திருப்பதும் இதன் சிறப்பம்சமாகும்.

## உலகின் மிகப்பெரிய தீவுகள்


| | |
|---|---|
| கிறீன்லாந்து | - 2175600 ச.கி.மீற்றர் பரப்பு |
| நியுகினியா | - 808510 ச.கி.மீற்றர் |
| போர்னியோ | - 751100 ச.கி.மீற்றர் |
| மடகஸ்கார் | - 587041 ச.கி.மீற்றர் |
| பானின் | - 507451 ச.கி.மீற்றர் |
| சுமாத்ரா | - 473605 ச.கி.மீற்றர் |
| ஹொன்சு தீவு | - 230455 ச.கி.மீற்றர் |
| இங்கிலாந்து | - 229870 ச.கி.மீற்றர் |
| விக்டோரியா | - 217291 ச.கி.மீற்றர் |
| லெஸ்மியர் | - 196236 ச.கி.மீற்றர் |



நாகசாகி நகரில் டெஜிமா செயற்கைத் தீவு



கலபகொஸ் தீவுக்குட்பட்ட பிரதேசத்தில் வாழும் மிருகம்



உலகில் மிகப்பெரிய தீவு கிறீன்லாந்து.



கடலின் நடுவே உருவான தீவு

அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீரை சாப்பிடுங்கள்

கீரை வகைகளை உணவில் சேர்த்துக் கொள்வதற்கு சிலர் விரும்புவதில்லை. எனினும், எமது நாட்டில் மலிவாகவும் குறைந்த விலையிலும் கிடைக்கும் அதிக போசனைச் சத்துக்களை உள்ளடக்கியுள்ள ஓர் உணவு வகையாக கீரை வகைகளைக் குறிப்பிடலாம். உணவாக உட்கொள்ளக் கூடிய கீரை வகைகள் பல உள்ளன. உதாரணமாக, அகத்தி, கங்குன், பொன்னாங்கண்ணி, வல்லாரை, பசளி போன்றவற்றைப் பிரதானமாகக் குறிப்பிடலாம். இவற்றை பச்சையாகவும் சமைத்தும் அல்லது இவற்றின் சாறிலிருந்து கஞ்சி தயாரித்தும் நாம் உணவாகக் கொள்ளலாம்.





## அடங்கியுள்ள போசனைச் சத்துக்கள்

**நார்ச்சத்து:**

கீரை வகைகளில் நார்ச்சத்து அதிகம் அடங்கியுள்ளது. நார்ச்சத்தானது செலுலோஸ் மற்றும் செமிசெலுலோஸ் கூட்டமைப்பிலான காபோஹைட்ரேட்களினால் உருவாக்கப்பட்டது. இவை மனிதனின் உணவு மார்க்கத்தில் அடங்கியுள்ள நொதிய வகைகளில் சமிபாட்டுக்குட்படாத ஒருவகை நார்ப்பொருளாகும்.

நார்ச்சத்துக்கள் அடங்கியுள்ள உணவு வகைகளை எமது பிரதான உணவு வேளையில் சேர்த்துக் கொள்வதனூடாக எமது உடலுக்கு அதிகளவு போசனைப் பதார்த்தங்கள் கிடைக்கும்.

உணவு வகைகளில் அடங்கியுள்ள நார்ச்சத்துக்களில் நீரில் கரையக்கூடியவை, நீரில் கரையாதவை என இரண்டு வகைகளுள்ளன. நீரில் கரையும் நார்ப்பொருளானது, பெரும்பாலும் நீரிழிவு நோயாளிகளின் குருதியிலுள்ள 'க்ளுகோஸ்' மட்டத்தைக் கட்டுப்படுத்தவும் 'கொலஸ்ட்ரோல்' அளவைக் குறைக்கவும் உதவுகின்றது. கீரை வகைகளில் நீரில் கரையாத நார்ப்பொருளே அதிகளவில் காணப்படுவதால் அது மலச்சிக்கலைத் தடுப்பதில் துணை புரிகின்றது.

**விற்றமின் A:**

எல்லாக் கீரை வகைகளிலும் விற்றமின் A யின் ஆரம்ப நிலையாகக் கருதப்படும் 'கெரட்நொய்ட்' அதிகளவில் அடங்கியுள்ளது. இந்த 'கெரட்நொய்ட்' தான் எமது உடலில் விற்றமின் Aயாக பின்னர் மாற்றமடைகின்றது. விற்றமின் A ஆனது கூர்மையான கண்பார்வை மற்றும் ஞாபக சக்தியை அதிகரித்தல் போன்றுவற்றுக்கு அத்தியாவசியமாக அமைகின்றது.

மேலும், எமது ஆகார மார்க்கமான தொண்டை, மூக்கு போன்ற உடல் அவயவங்களில் உள்ள கலன்களின் ஆரோக்கிய நிலையை சீராகப் பேணவும் விற்றமின் A உதவுகின்றது.

**இரும்புச் சத்து:**

இரும்புச் சத்தானது உடலுக்கு அவசியம் தேவைப்படுகின்ற கனியுப்பு வகைகளில் ஒன்றாகும். குறிப்பாக, குருதிக் கலன்களை சீராகப் பேணுவதற்கும் இரும்புச் சத்து மிக அவசியமாகும்.

**ஃபோலிக் அமிலம்:**

விற்றமின் B கூறுகளுக்குள் உள்ளடங்குகின்ற ஃபோலிக் அமிலமானது கடும் பச்சை நிற மரக்கறி வகைகள் மற்றும் கீரை வகைகளில் அதிகளவில் அடங்கியுள்ளது. கறிவேப்பிலை, அகத்திக் கீரை என்பன இவ்வகையில் அடங்கும். ஃபோலிக் அமிலமானது குருதிக் கலன்களில் படிப்படியான அதிகரிப்புக்கு அத்தியாவசியமான கூறாகும். ஃபோலிக் அமிலக் குறைபாட்டினால் 'அனீமியா' எனப்படும் நோய் ஏற்படலாம்.

அவ்வாறே, சிறு வயதில் நரம்புத் தொகுதிகளின் சீரான வளர்ச்சிக்கும் இவ் அமிலம் தேவைப்படுகின்றது. கர்ப்பிணித் தாய்மார்களின் உடம்பில் போதியளவு ஃபோலிக் அமிலம் இல்லாத பட்சத்தில் வளரும் குழந்தையின் மூளை வளர்ச்சியும் நரம்புத்தொகுதி வளர்ச்சியும் குன்றும். இதனால், பிறக்கும் பிள்ளையின் ஞாபக சக்தியும் குறைவாகவே இருக்கும்.

## உடற்பருமனைக் குறைக்கவும் புற்றுநோயைத் தடுக்கவும்

எமது நாட்டில் புற்றுநோய்க்கு ஆளாகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம். நார்ப்பொருள் அடங்கிய உணவு வகைகள் குடற் புற்றுநோய் ஏற்படுவதைத் தவிர்க்கும் வல்லமை கொண்டவை. அத்துடன், கீரைகளை உணவில் சேர்த்துக் கொள்வதனூடாக வயது வித்தியாசமின்றி சிறியோர், பெரியோர் என அனைவரும் எதிர்நோக்கும் உடற்பருமன் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

## துவையலில் தேங்காய், எலுமிச்சை சாறு சேர்க்கப்படுவது ஏன்?

விற்றமின் A கொழுப்பில் கரையக்கூடியது. ஆகவே, துவையல் தயாரிக்கும்போது சேர்க்கப்படும் தேங்காயிலுள்ள கொழுப்பில் வெகு விரைவாக விற்றமின் A கரைந்து விடும். நாம் துவையலை உட்கொள்ளும்போது அது விரைவாக அகத்துறிஞ்சப்படுகின்றது.

விற்றமின் C ஆனது, கீரை வகைகளிலுள்ள இரும்புச் சத்துக்களை விரைவில் அகத்துறிஞ்சப்படுவதற்கு துணைபுரிகின்றது. எனவே தான், துவையல் தயாரிக்கும் போது எலுமிச்சம்பழச்சாறு சேர்க்கப்படுகின்றது.




-நுஸ்ஃபா கௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமிங்கிலம், சுறா மீன்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள்

## உலகின் பிரமாண்டமான மீன்



Source: WWF/IUCN/Florida Museum of Natural History

ஆழ்கடலில் பிரமாண்டமான உயிரினமாக திமிங்கிலங்கள் கருதப்படுகின்றன. Rincodon என்ற உயிரியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் இந்த சுறா மீன் வகை உலகில் அழிவை எதிர்நோக்கும் ஆபத்து அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள உயிரின வகைகளுள் ஒன்றாகும்.

கடல்நீர் உஷ்ணம் அதிகம் உள்ள நாடுகளின் கடல் பரப்புகளில் சுறா வகைகள் அதிகமாக வாழ்கின்றன. இவற்றின் வாழ்க்கை நிலைபற்றி ஆராய்ந்த உயிரியல் விஞ்ஞானிகள் சுறா மீன்கள் 6 கோடி வருடங்களுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வரும் நீண்ட கால வாழ்வுரிமை உள்ள உயிரினம் என்று கண்டுபிடித்துள்ளனர். அந்தளவு நீண்ட காலத்திற்குரிய கடல் சூழல் நிலைமைகளை இந்த மீனின் உடலில் அவதானிக்க முடிவதாகவும் கூறுகின்றனர்.

இந்த மீன் வகை பற்றிய முதலாவது ஆராய்ச்சி 1828 ஆம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தென் ஆபிரிக்க கடல் பரப்பில் இருந்தே முதலாவது சுறாமீன்கள் 1828 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. பிரித்தானியாவைச் சேர்ந்த கடற்படை வைத்திய நிபுணர் அன்ரூ ஸ்மித் இந்த இனத்தின் முதலாவது மீனைக் கண்டுபிடித்தார். அவர் இவ்வகை மீன்கள் பற்றிய அறிக்கையொன்றை வெளியிட்ட பின்னரே உலகில் சுறா மீன்கள் பற்றிய சிந்தனையோட்டம் ஏற்பட்டது.

### சுறாவின் செயற்பாடுகள்

கடலில் உட்பரப்பில் அதிக உஷ்ணம் உள்ள பிரதேசங்களை சுறாக்கள் அதிகம் விரும்பினாலும் இம் மீன்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாக அவை வாழ்கின்ற பிரதேசங்களில் இருந்து ஏனைய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றன.

இவை 700 மீற்றரை விட ஆழமான ஆழ்கடல் பகுதிகளில் அதிகம் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் தனித்தனியாகவே வாழ்கின்றன. கூட்டமாக உலாவுவதைக் காணமுடிவதில்லை. இதன் வாய் நல்ல அகலமாகும். வாய் திறந்த நிலையில் இருந்தால் 41/2 அடி அளவு அகலம் தென்படும். வாயில் 300-350 வரையான பெரிய பற்கள் உள்ளன. அவற்றுக்கிடையில் சிறிய பற்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன. இவை மணித்தியாலத்திற்கு 5 கி.மீற்றர் வேகத்தில் நீந்திச் செல்லக்கூடியனவாகும்.

### மிக நீளமான மீன்

இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகவும் நீளமான மீனின் அளவு $41^{1/2}$ அடி நீளமாகும். இதன் நிறை (பாரம்) 47300 இறாத்தல்கள் (22500 கி.கிராம்) என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.


### அச்சுறுத்தல்

சுறா மீன்களின்/திமிங்கிலங்களின் தோல், எண்ணெய்,தசைகளுக்கு உலகில் நல்ல கிராக்கி நிலவுகின்றது. அதனால், இவற்றைப் பிடிப்பவர்கள் உலகில் அதிகமானோர் உள்ளனர். பொருளாதார ரீதியாக பெருமளவு பணம் ஈட்டக்கூடியதாகையால் இவை மரண அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள உயிரின வகையைச் சேர்ந்தவையாக கணிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோன்று கடலில் இவை நீந்தும்போது பாரிய கப்பல்களில் மோதுண்டு காயப்பட்டு அல்லது இறந்து கரை ஒதுங்குகின்றன. கடலில் கப்பல்களில் இருந்து சிந்தப்படுகின்ற எண்ணெய் காரணமாக கடல் மாசடைவதாலும் இவை மரண அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றன.

கடலில் உள்ள பிரமாண்டமான உயிரினம் சுறா, திமிங்கிலங்கள் தான். கப்பல்களில் மோதி கவிழ்க்கச் செய்யும் அளவுக்கு சக்திமிக்கதாக இருந்தபோதும் அதன் பலத்தால் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முடியாது அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருப்பதால் இன்று உலகில் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினமாக இவை உள்ளன.

**அமீர் ஹுஸைசன்**






## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
தொ.பே.இல: ..................................................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.............................................. ..................................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**CIRCULATION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர்கள்

1. வான்கோட்டைக்குள் ஒட்டி ஒளிந்து எட்டி உலகைக் கைகொட்டி நகைக்கும் கட்டித்தங்கம். அது என்ன?

2. மரத்திலிருந்து மாம்பழம் கீழே விழுந்தது. இருவர் கண்டனர். 10 பேர் எடுத்தனர். ஒருவர் ருசி பார்க்க, 32 பேர் சாப்பிட்டனர். அவர்கள் யார்?

3. கதிரொளி தொடாத கங்கை, கறந்த பாலில் இல்லாத வெள்ளை, களிமண்ணால் செய்யாத பண்டம், காற்று நுழையாத வீடு. அது என்ன?

4. நான்கு கால்களுண்டு மிருகமல்ல, நீரிலே நீந்தும் மீனல்ல, பாயும். ஆனால், புலியல்ல. அது என்ன?

5. ஆறு எழுத்துள்ள உலோகப் பெயர். அதன் இறுதி மூன்று எழுத்துக்கள் சேர்ந்தால் ஒரு கொடிய பிராணி. அது என்ன?

### விடைகள்

1. சூரியன்
2. கண், கைவிரல்கள், நாக்கு, பற்கள்
3. தேங்காய்
4. தவளை
5. துத்தநாகம்

தொகுப்பு :
ஏ.ஆர்.எம்.இப்லால் ரஹ்மான்,
தரம் - 5,இக்றாஹ் மு.ம.வித்.,
உலப்பனை.

# குருதட்சிணை

குருவாயூரில் குருதாட்சலம் என்ற ஒரு சங்கீத வித்துவான் இருந்தார். அவருக்கு ஒரு மகனும் மகளும் இருந்தனர். மகளின் பெயர்



கலைவாணி. அவளுக்கு சங்கீதமென்றாலே அலாதிப் பிரியம். குருதாட்சலம் தன் மகனும் சங்கீதமேதையாக உருவாக வேண்டும் என்ற அவாவுடன் சங்கீதத்தை அவனுக்கு கற்பித்தார். ஆனால், அவனோ சங்கீதத்தின் வாடையைக் கூட நுகரவில்லை; கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? அக்காலத்தில் பெண்கள் படிக்கத் தேவையில்லை, அடுப்பங்கரைதான் அவர்களின் சொத்து என்றவோர் பெண்ணடிமை மூடக் கொள்கை இருந்தமையால் கலைவாணிக்கு எந்தவிதக் கல்வியறிவோ சங்கீதமோ புகட்டப்படவில்லை.

அவளது அண்ணனுக்கு தந்தை அதிகாலையிலேயே வீட்டு முற்றத்தில் இருந்து கொண்டு சங்கீதம் புகட்டுவது வழக்கம். அவ்வீட்டின் முற்றத்தருகேதான் கிணற்றடி இருந்தது. அதனால், அவளும் அதிகாலையிலே எழுந்து பாத்திரங்களைக் கழுவும் சாக்குப்போக்குடன் தந்தை சங்கீதம் கற்றுக் கொடுப்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பாள்.

அவள் சங்கீதத்திலே மூழ்கி அவளது இதழ்களும் இசைக்கத் தொடங்கிவிடும். இதனால், தன்னையே மறந்து பல தடவை பாத்திரத்தைக் கீழே போட்டு விடுவதுண்டு. இது அடிக்கடி நடைபெறவே தந்தைக்கு அவள் மீது பெரும் கோபம் ஏற்பட்டது. ஒருநாள் கலைவாணியை தந்தை மோசமாகத் திட்டிவிட்டார். இதனால், மிகுந்த கவலையடைந்த கலைவாணி தனது சங்கீதத்திற்கு தானே ஒரு கட்டுப்போட்டுக் கொண்டாள். ஆனாலும், அவளுக்கு இசையிலே ஆர்வம் கூடியதே தவிரக் குறையவில்லை. இதே வேளை, தனது மகன் சங்கீதத்தில் சுத்தசூன்யமாக இருப்பதை உணர்ந்த குருதாட்சலம் கடுந்துயரும் கோபமும் கொண்டிருந்தார். வழமைபோல் ஒருநாள் கலைவாணி இசையில் தன்னை மறந்திருக்கையில் குருதாட்சலம் தற்செயலாக அவளை நோக்கினார்.அவளிடமிருந்த திறன்களைகண்டு வியந்து போனார். அன்று முதல் குருதாட்சலம் கலைவாணியை தனது ஒரே சிஷ்யையாக ஏற்றுக் கொண்டார். குருதாட்சலம் தனக்கு குருதட்சிணையாக "நீ உலகில் உயர்ந்து காட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். கலைவாணி தன் உயிராக நேசிக்கும் சங்கீதத்தை ஐயமுறக் கற்றாள்; பல்கலையும் கற்றுயர்ந்து ஓர் மாமணியாக தந்தை கேட்ட குருதட்சிணையை நிறைவேற்றினாள்.

அற்பச் சிப்பிக்குள்தான் முத்து விளையும் இதுபோல இவளும் பார்புகழ மாதர் குலத்துக்கே ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தாள்.

எம்.எல்.லாஸிம், தரம் - 9ʲ,
அக்/அஸ்-ஸிராஜ் ம.வித்.,
அக்கரைப்பற்று-01.

# தமிழின் தற்கால நிலை

'தமிழுக்கு அமுதென்று பேர். அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்பது கவிஞர் பாரதிதாசனின் வாக்காகும். உலகில் காணப்படும் பலதரப்பட்ட மொழிகளில் கதைகூறும் சுவை சொட்டும் மொழிகள் சிலவாகும். அவற்றுள் மிக இலக்கியச் சுவைமிகு மொழியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது.



'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றியது மூத்த தமிழ்.' தமிழ் மொழியானது தனது தூய பேச்சு வழக்கிலிருந்து நழுவி இன்று பல்வேறு மொழிப் பிரயோகங்களுக்குள்ளாகி உள்ளது. முன்னைய காலம் தமிழர்கள் தமிழை மட்டும் பேசுவார்கள். இன்று தமிழ் மொழியில் பல்வேறு மொழிச் சொற்களும் கலந்துள்ளன. இதற்கு உதாரணமாக தற்கால மக்கள் தமிழ் மொழியுடன் ஆங்கிலப் பதங்களைச் சேர்த்துப் பேசுவதைக் கூறலாம்.

பண்டைய காலத்தில் தமிழினிமையை எடுத்துக் கூறும் வகையில் புராணங்கள், காப்பியங்கள், காவியங்கள், பாடல்கள், கதைகள் போன்றவை ஆக்கப்பட்டிருந்தன. ஆனால், தற்போது இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டு பல புதுக்கவிதைகள் காணப்படுகின்றன.

இவைகளில் சிலவற்றில் இலக்கணம் மற்றும் எழுத்துப் பிழைகள் என்பன இருப்பதைக் காணமுடிகின்றது. இந்நிலை மாறி தமிழ் மொழியை இச்சீர்கேட்டில் இருந்து பாதுகாப்பது கற்றோர் தம் கடமையாகும்.

க.ஹர்சாயினி,
மா/பாக்கியம் தேசிய கல்.,
மாத்தளை.

## வெளிநாட்டுப் பழமொழிகள்

✱ அறிவை விட பொறுமைதான் சிறந்த பலன்களைப் பெற்றுத் தரும். -டச்சு

✱ அதிர்ஷ்டம் மிகுந்தவனை கடலில் தூக்கிப் போடுங்கள் வாயில் ஒரு மீனுடன் வெளியில் வந்து விடுவான். -அரேபியா

✱ ஒவ்வொரு நோயாளியும் ஒரு மருத்துவன். -அயர்லாந்து

✱ கடவுள் கட்டாயம் கொடுப்பார் ஆனால், வாரச் சம்பளத்தைப் போன்று ஒவ்வொரு வாரமும் அவர் கொடுக்க மாட்டார். -சீனா

✱ இன்பங்கள் சோடியாக சேர்ந்து வருவதில்லை. துரதிர்ஷ்டம் தனித்து வருவதில்லை. -போலிஷ்

✱ ஓர் எலி பூனையைப் பார்த்து சிரித்தால் எலிக்கு அருகில் ஒரு பொந்து இருக்கும். - நைஜீரியா

✱ ஒரு காகம் இன்னொரு காகத்தின் கண்களைக் கொத்திச் சாப்பிடுவதில்லை. -இங்கிலாந்து

தொகுப்பு: எல்.ரூபஸ்,
தரம் - 9ᶜ,
கொ/உவெஸ்லி கல்.,
கொழும்பு-09.

## பொது அறிவு

✱ உலகில் காகங்களே இல்லாத நாடு? நியூஸிலாந்து
✱ ஸ்கொட்லாந்தின் தேசிய விளையாட்டு கால்பந்தாட்டம்
✱ துருக்கியின் தேசிய விளையாட்டு மல்யுத்தம்
✱ ஜப்பானின் தேசிய விளையாட்டு கராத்தே
✱ திமிங்கிலத்தின் மூளையின் எடை? 10kg
✱ யானையின் மூளையின் எடை? 5kg
✱ பங்களாதேஷின் தேசிய கனி? மாம்பழம்
✱ பாயமுடியாத முலையூட்டி யானை



தொகுப்பு: ம.திவ்விய பிரணீத்,
தரம் - 7ᴰ, புனித அந்தோனியார் ஆ.கல், கண்டி.







படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்


பெயர்:..............................
முகவரி:..............................
..............................
பாடசாலை:..............................
வகுப்பு:..............................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு


க.லலித்குமார், தரம் - 9^A, போடைஸ் த.வித்., டிக்கோயா.


நஸ்லா நவ்பர், தரம் - 10, களு/ஸாஹிரா கல்., தர்கா நகர்.


யோ.திவ்யலோஜனி, தரம் - 11^B, தமிழ் ம.வித்., பண்டாரவளை.


எம்.ரஹ்மான், தரம் - 3^B, ஸாஹிரா கல்லூரி, கம்பளை.


எஃப்.அஃப்ரா உவைஸ், தரம் - 6, தி/மூதூர் தேசிய பாட., மூதூர்-06.


எம்.ஐ.எம்.ஆசிப், தரம் - 8^A, ஸாஹிரா தேசிய பாட. மாவனல்லை.


கு.அருண்பிரசாத், தரம் - 4^C, யாழ்/இந்து ஆரம்ப பாட., யாழ்ப்பாணம்.



எம்.ஆர்.ஆதிகா, தரம் - 7^B, அக்கல் சர்வதேச பெ.பாட., அக்குரனை.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 1887
வி.துர்க்கா, தரம் - 5^A, தி/மெதடிஸ்த பெ.கல்., திருகோணமலை.


அங்.இல : 1888
டான் ஷெரான் கசாத்தர், தரம் - 3^C, புனித மிக்கேல் தே.பாட., மட்டக்களப்பு.


அங்.இல : 1889
என்.எம்.நுஸ்கி, தரம் - 6^C, பு/சாஹிரா தே.கல்., புத்தளம்.


அங்.இல : 1890
ர.அக்ஷர், தரம் - 7^D, கொ/டி.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-08.


அங்.இல : 1891
அஸ்னா றஸாக், தரம் - 8^F, பதியுத்தீன் ம.பெ.கல்., கண்டி.


அங்.இல : 1892
ஆர்.ஜெயராஜ், தரம் - 9, உயிலன்குளம் ரோ.க.த.ம.வித்., மன்னார்.


அங்.இல : 1893
சு.ரேகா, தரம் - 9, யா/சாவ.மகளிர் கல்., சாவகச்சேரி.


அங்.இல : 1894
எம்.என்.எம்.ஆகில், தரம் - 7^I, புனித சில்வெஸ்டர் கல்., கண்டி.


அங்.இல : 1895
டி.ரியாஸ், தரம் - 10^B, அல்-ஹிலால் ஆ.ம.வித்., மூதூர்.


அங்.இல : 1896
எம்.மகேஸ்வரி, தரம் - 11, க/கந்தகட்டிய த.ம.வித்., மடுல்கலை.


அங்.இல : 1897
கே.மனோஜ், தரம் - 12, மா/கந்தேநுவர த.வித்., மாத்தளை.


அங்.இல : 1898
எம்.ஹிதாயதுல்லாஹ், தரம் - 13^(கலை), பது/பசறை த.ம.வித்., பதுளை.

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தினால் 2007 இல் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மீலாதுன் நபி தின போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா 06.03.2008 தி/ஸாஹிரா கல்லூரி 'அப்துல் மஜீத்' மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவின் போது தி/ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவிகள் 'கஸீதா' பாடுவதையும் போட்டியொன்றில் வெற்றியீட்டிய மாணவருக்கு கல்லூரி அதிபர் முஹம்மத் அலி சான்றிதழ் வழங்குவதையும் விழாவுக்கு வருகை தந்திருந்தவர்களையும் படங்களில் காணலாம்.

(படமும் தகவலும் - ற.மு.றஸாட்)



அண்மையில் பதுளை, 'ஐங்கரன்' அறநெறிப் பாடசாலையில் சிவராத்திரியை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சியில் மாணவி, எஸ்.யதர்ஷணா பரதநாட்டியம் ஆடுவதைப் படத்தில் காணலாம்.

(தகவல்-படம்: வி.சுப்ரமணியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்வரும் ஒகஸ்ட் மாதமளவில் சீனாவின் பீஜிங் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவது நீங்கள் அறிந்ததே. திபெத் நாட்டினரும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள ஆர்வம் செலுத்திய நிலையில், திபெத் ஒரு தனிநாடாக ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள முடியாது என்றும் அது சீனாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு பகுதியாகவே கலந்து கொள்ளலாம் என்றும் சீனா அறிவித்துள்ளதைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் திபெத்தியர்கள் தமது எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.**

**அத்துடன் இவர்களைத் தூண்டிவிடுவதன் பின்னணியில் தலய் லாமாவும் அவருக்கு ஆதரவு நல்கும் நாடுகளும் இருந்து வருவதாக விமர்சனங்களும் எழுந்துள்ளன. இச்சூழ்நிலையில், திபெத் பற்றியும் அங்கு நிலவும் ஆட்சி முறை பற்றியும் தலய் லாமா என்பவர் யார்? என்பது பற்றியும் நீங்கள் அறிந்திருப்பது அவசியம் என்று நாம் கருதுகின்றோம்.**



தற்போதைய தலய் லாமா


நொர்பியுலிங்கா மாளிகை





இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் இந்தியாவின் வடகிழக்கே அமைந்துள்ள பிரதேசமே திபெத் ஆகும். பௌத்தர்களை பெரும்பான்மையாகக் கொண்ட திபெத், 1951 வரை அமைதிப் பூங்காவாகவே இருந்தது. ஆனால், 1951 இல் திபெத்திற்கு எதிராக சீனாவின் முதலாவது ஆக்கிரமிப்பு யுத்தம் ஆரம்பமாகியது. இதனையடுத்து சீனா 1959 ஆம் ஆண்டு திபெத் நாட்டை முழுமையாக ஆக்கிரமித்தது.

அதுவரை நாட்டின் ஆன்மீகத்தலைவராகவும் ஆட்சித்தலைவராகவும் இருந்த தலய் லாமா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இருப்பினும் அவர் தனது போராட்டத்தைக் கைவிடவில்லை.

சீன ஆக்கிரமிப்பிற்குப்பின் பல்லாயிரக்கணக்கான திபெத் மக்கள் தமது தாய்நாட்டை விட்டு வெளியேறி உலகின் பல்வேறு பகுதிகளில் குடியேறினர். இவர்கள் சீன ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தும் எதிர்த்தவர்களாகவே இருக்கின்றனர்.

## தலய் லாமா என்றால்...?

திபெத் நாட்டில் பின்பற்றப்படுகின்ற பௌத்த மதமானது பல்வேறுபட்ட சம்பிரதாய முறைகளை உள்ளடக்கியிருப்பதால் அது 'திபெத்திய பௌத்த மதம்' என அழைக்கப்படுகின்றது.

இச்சம்பிரதாயத்தில் ஆன்மீகத் தலைவரை தலய் லாமா என அழைப்பர். அதன் சரியான உச்சரிப்பு'டலய் ப்லாமா' என்பதாகும். திபெத்தில் 1931 இல் இருந்து மதத்தலைவரை தெரிவு செய்யும் சம்பிரதாய முறைகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. ஆரம்ப காலத்தில் மதத்தலைவராக மாத்திரம் கருதப்பட்ட தலய் லாமா, 17 ஆம் நூற்றாண்டிலிருந்து திபெத்தின் ஆட்சியாளராகவும் நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து 1959 வரை திபெத்தின் ஆட்சியாளராக தலய் லாமாக்களே இருந்துள்ளனர். எனினும், திபெத் நாட்டின் முழுப் பிரதேசத்தையும் ஆட்சி செய்யும் வாய்ப்பு இவர்களுக்குக் கிடைக்கவில்லை.
மாறாக, நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களை மாத்திரமே இவர்கள் ஆட்சி செய்து வந்தனர்.


தற்போதைய தலய் லாமா திபெத்தின் 14 ஆவது தலய் லாமா ஆவார். இவர் திபெத்தில் இதுவரை காலமிருந்த ஏனைய தலய் லாமாக்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர். சீனாவிடமிருந்து திபெத் நாட்டை விடுவிப்பதற்காக அவர் மேற்கொள்ளும் அமைதியான வேலைத் திட்டங்களும் நடவடிக்கைகளுமே அதற்கு முக்கிய காரணமாகும். அவருக்கு சீன எதிர்ப்பு நாடுகளிடமிருந்து மிகுந்த ஆதரவு கிடைக்கின்றது. அமெரிக்காவை இதற்கு சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

மொங்கோலிய மொழியின்படி, 'தலய்' என்பதன் பொருள் 'சமுத்திரம்' என்பதாகும். 'லாமா' என்பதன் பொருள் ஆசிரியர் அல்லது ஆசான் என்பதாகும். இதன்படி, தலய் லாமா என்பதன் பொருள் 'சமுத்திர அளவு அறிவாற்றல் உடையவர்' என்பதாகக் கொள்ளலாம்.

## மறுபிறப்பு

உலகின் பல்வேறு நாடுகளில் மதத் தலைவர்களைத் தெரிவு செய்யும் முறையில் இருந்து முற்றிலும் வேறுபட்ட விதமாகவே தலய் லாமாக்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். 'தலய் லாமா' எனும்போது ஒரே ஆன்மா மீண்டும் மீண்டும் பிறப்பதாகவே திபெத்தியர்கள் நம்புகின்றனர். எனவே, தலய் லாமாவை தேர்தல் மூலம் தெரிவு செய்யமுடியாது. ஒரு தலய் லாமா இறந்தால் அவர் மீண்டும் எங்கு பிறந்துள்ளார் என்ற தேடல் ஆரம்பமாகும். பௌத்த பிக்குகளின் தலைமையிலேயே இத்தேடல் நடைபெறும். இதற்காக ஓரிரு வருடங்களோ, பல வருடங்களோ எடுக்கலாம். குழந்தை பிறந்த நேரம் ஏற்பட்ட மாற்றங்கள், குழந்தையின் இயல்பான சுபாவங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் இது குறித்து அலசி ஆராயப்பட்டு 'தலய் லாமா' பிறந்துள்ளார் எனத் தீர்மானிக்கப்படும். அடுத்த தலய் லாமா இவர்தான் என இனங்காணப்பட்ட குழந்தை 'டுல்கு' என அழைக்கப்படும். பின்னர், இந்தக் குழந்தை தலைநகராகவும் பிரதான மதபீடமும் அமைந்துள்ள 'லாசா' நகருக்குக் கொண்டு வரப்பட்டு லாமாவாக நியமிக்கப்படுவதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திபெத்தின் தலய் லாமா பற்றி...



கான சகல பயிற்சிகளும் வழங்கப்படும்.

எனினும், சீன ஆட்சியின் பின் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சீனா, 'பஞ்ச்சென் லாமா' எனும் புதிய பதவி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. அது சீன அரசால் ஏற்படுத்தப்பட்ட பதவி. இதில் தலய் லாமாக்கள் அதிர்ஷ்ட சீட்டு முறைப்படி தெரிவு செய்யப்படுகின்றனர். தற்போதுள்ள 14 ஆவது தலய் லாமா இறந்தபின் வேறொரு தலய் லாமாவை தெரிவுசெய்யாமல் இருக்க சீனா உத்தேசித்துள்ளது.

தற்போதைய தலய் லாமாவின் கருத்துப்படி, மீண்டுமொரு தலய் லாமா திபெத் நாட்டில் பிறக்கமாட்டார் என்றே திபெத்தியர்கள் நம்புகின்றனர். "சீனர்களின் ஆட்சியின் கீழ் உள்ள திபெத் நாட்டில் நான் மீண்டும் பிறக்கமாட்டேன்" என்று தற்போதைய தலய் லாமா கூறிவருகின்றமையே இதற்குக் காரணமாகும். எனினும் தனது நாட்டுக்காக தன்னால் நிறைவேற்ற முடியாமல்போன பல தேவைகளை நிறைவேற்ற உலகின்

## இதுவரை இருந்த தலய் லாமாக்கள்

| | |
|---|---|
| ✱ கெடுன் ட்ரப் | 1391-1474 |
| ✱ கென்டுன் க்யெட்சோ | 1475-1541 |
| ✱ சொனாம் க்யெட்சோ | 1543-1588 |
| ✱ யொன்டென் க்யெட்சோ | 1589-1616 |
| ✱ லொப்சென் க்யெட்சோ | 1682-1706 |
| ✱ சென்யேங் க்யெட்சோ | 1683-1706 |
| ✱ கெல்சின் க்யெட்சோ | 1708-1757 |
| ✱ ஜம்பேல் க்யெட்சோ | 1758-1804 |
| ✱ லுங்டொக் க்யெட்சோ | 1806-1815 |
| ✱ சுல்ட்ரீம் க்யெட்சோ | 1816-1837 |
| ✱ கென்ட்ரப் க்யெட்சோ | 1838-1856 |
| ✱ ட்ரின்லெய் க்யெட்சோ | 1856-1875 |
| ✱ துப்டென் க்யெட்சோ | 1876-1933 |
| ✱ டென்சின் க்யெட்சோ | 1935 இலிருந்து இன்றுவரை |


எங்காவது ஒருநாட்டில் பிறப்பதாகவும் அவர் கூறுகின்றார். அவ்வாறான நிலை ஏற்பட்டால் அவரின் மறுபிறப்பைக் கண்டுபிடிப்பதானது மிகக் கஷ்டமாக இருக்கும் என திபெத்தியர்கள் கருதுகின்றனர்.

## தற்போதைய தலய் லாமா அவர்கள்

திபெத்தியர்களின் தற்போதைய தலைவராக இருக்கும் தலய் லாமா 1935 இல் பிறந்தார். வட திபெத்தின் ஹாமோ டொன்டுப் என்றே அவர் அழைக்கப்பட்டார். அவரின் தந்தை ஒரு விவசாயி. 1937 இல் அவருக்கு இரண்டு வயதாக இருக்கும் போதுதான் அவர் முன்னைய தலய் லாமாவின் மறுபிறவி என உறுதிப்படுத்தப்பட்டார்.


இவருக்கு 16 வயதாக இருக்கும் போதுதான் சீனாவின் முதலாவது ஆக்கிரமிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சீனாவினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த நிர்ப்பந்தம் காரணமாக தனது 24 ஆவது வயதில் நாட்டைவிட்டே வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால், உலகின் பிரசித்தி பெற்ற அகதியாக தலய் லாமாவை உலக மக்கள் கருதுகின்றனர். தனது கருத்துக்களையும் கொள்கைகளையும் வெளிப்படுத்த இன்று அவருக்கு நவீன தொழில்நுட்ப, ஊடக வசதிகள் இருக்கின்றன.

"சீனா யுத்தத்திற்கு வரும்பொழுது யுத்தம் செய்வது எப்படி என நான் அறிந்திருக்கவில்லை. அப்பொழுது எனது வயதோ வெறும் 16 தான். எனினும், எனது தாய்நாட்டுக்காக என்னை அர்ப்பணிக்க வேண்டி இருந்தது. ஆகவே, இயன்றளவு சக்தியைப்பயன்படுத்திப் போராடினேன். எனினும் சீனாவின்'செம்படை'யினரைத் தாக்குப்பிடிக்க திபெத் இராணுவத்தினால் முடியாமலுள்ளது" என தலய் லாமா கருத்துத் தெரிவித்துள்ளார்.









தரம்சாலா




பொட்டாலா மாளிகை

ஆன்மீக முதிர்ச்சி அடைந்த நிலையிலும் அவர், தான் ஒரு சாதாரண பௌத்த பிக்குஎன்றே கூறுகின்றார். தலய் லாமா பதவியானது மனிதனால் உருவாக்கப்பட்டதே ஒழிய வேறொன்றுமில்லை என்கிறார். மக்கள் தன்னை தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளமையினால் அவர்களுக்குத் தலைவராக இருக்க வேண்டியது தனது கடமை என்கிறார்.

1959 இல் திபெத் நாட்டில் இருந்து வெளியேறும் வரை லாசா நகரில் அமைந்த புனிதத் தலமே தலய் லாமாவின் வாசஸ்தலமாக இருந்தது. அவர் குளிர்காலத்தில் 'பொட்டாலா' மாளிகையில் தங்கியிருப்பார். வசந்த காலத்தில் 'நொர்பியுலிங்கா' எனும் மாளிகையில் தங்குவார். எனினும், 1959 க்குப் பின் அவர் இந்தியாவின் வட பகுதியில் அமைந்துள்ள 'தரம்சாலா' எனும் பிரதேசத்திலேயே வசித்து வருகிறார். இப்பிரதேசம் திபெத் அரசின் தலைமையகமாகவும் இன்று விளங்குகின்றது.

ப.இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆர்ஜன்டீனா-2



## கலாசாரம்

ஆர்ஜன்டீனாவின் கலாசாரத்தில் பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகள் பாரியளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. 19 ஆம் நூற்றாண்டில் ஆர்ஜன்டீனாவின் கலை, இலக்கியங்களில் பிரான்ஸின் தாக்கங்கள் பாரிய அளவில் இடம்பெற்றன. இதற்கு மேலாக இத்தாலி மற்றும் ஆங்கிலத்தின் செல்வாக்கினையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனினும், கலாசார விடயத்தில் ஐரோப்பியரின் கருத்துக்கள் ஆர்ஜன்டீனாவில் இன்றும் முக்கிய இடத்தை வகிப்பதோடு பின்பற்றவும்.படுகின்றன. அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற கலாசார நிகழ்வுகளை ஆர்ஜன்டீனாவில் இன்றளவிலும் காணலாம்.

## கல்வி

மேற்குலகின் சிறந்த கல்வித் திட்டத்தைக் கொண்ட நாடாக ஆர்ஜன்டீனா மிளிர்ந்தபோதும் தொடர்ச்சியாக ஏற்பட்ட இராணுவ ஆட்சியின் காரணமாக இச்சிறப்பான நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

## கலை

'கவ்ச்சோ' பண்பாட்டுக் கலையின் தாக்கம் இங்கு அதிகம். அவர்களின் பாடல்கள், நடனங்கள் என்பன இன்றும் இம் மக்களால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நாட்டு மக்கள் அழகிய சித்திரங்களைத் தீட்டுவதில் திறமை மிக்கவர்கள். கிராமிய நடனங்களில் 'டென்கோ' எனும் நடனம் ஆர்ஜன்டீன மக்களால் பெரிதும் விரும்பப்படுகின்றது. இது 'போல்ரூம்' நடனத்தின் ஆரம்பமாகக் கருதப்படுவதோடு தலைநகர் புவனர்ஸ் அயர்ஸ் நகரை கேந்திரமாக வைத்தே இது உருவாகியிருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

## விளையாட்டு

ஆர்ஜன்டீனா.... என்றதும் நம் நினைவில் வரும் மற்றொரு முக்கிய விடயம் கால்பந்து விளையாட்டாகும். 1978 மற்றும் 1986 ஆகிய வருடங்களில் உலகக் கிண்ண கால்பந்துப் போட்டிகளில் ஆர்ஜன்டீனா கால்பந்து அணி வீரர்கள் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியமையும் குறிப்பிடத்தக்கது. ஆர்ஜன்டீனாவின் புகழ்பெற்ற கால்பந்து வீரரான டியாகோ மரடோனா உலகின் தலைசிறந்த நட்சத்திர வீரராகவும் கருதப்படுகிறார்.

## பொருளாதாரம்

தென் அமெரிக்காவில் மிகவும் செழிப்பான நாடாக ஆர்ஜன்டீனா திகழ்கின்றது. இங்குள்ள வளமான விவசாய நிலங்களே இதற்குக் காரணமாகும். விலங்கு வேளாண்மையும் இங்கு சிறப்பாக நடைபெறுகின்றது. 20 ஆம் நூற்றாண்டில் நாட்டின் பொருளாதாரம் கைத்தொழில் துறையை நோக்கிச் சென்றது. எனினும், 21 ஆம் நூற்றாண்டில் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சி அடைந்தபோதும் தற்பொழுது நாடு மீண்டும் பொருளாதாரத்தில் சிறப்பு நிலையை அடைந்துள்ளது.

✱ **ஏற்றுமதியாகும் பொருட்கள்:** எண்ணெய்,கனிய எண்ணெய், மின்சாரம், தானிய உணவு வகை

✱ **ஏற்றுமதியாகும் நாடுகள்:** பிரேசில், சிலி, அமெரிக்கா

✱ **இறக்குமதி செய்யப்படும் பொருட்கள்:** இயந்திரங்கள், மோட்டார் வாகனம், இரசாயனத் திரவியம்

✱ **இறக்குமதி செய்யப்படும் நாடுகள்:** பிரேசில், ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, சீனா

✱ **நாணயம்:** ஆர்ஜன்டீனா பெசோ (ARS)

## போக்குவரத்தும் தொடர்பாடலும்



1948 முதல் 1992 வரை நாட்டின் புகையிரதப் போக்குவரத்துத்துறை அரசாங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. எனினும், 1994 முதல் புகையிரதப் போக்குவரத்துத்துறை தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 'ஏரோலினீஸ் ஆர்ஜன்டீனாஸ்' விமானசேவை மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு வான் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தவிர, ஆற்றுப்போக்குவரத்தும் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. பிரதான வீதிப் போக்குவரத்து சேவையை பொறுத்தவரையில் தனியார் பஸ் போக்குவரத்துத் துறை அதன் சேவையை சிறப்பாக நடத்துகின்றது எனலாம். தொடர்பாடல் துறையில் மிக முன்னேற்றகரமான நாடாக ஆர்ஜன்டீனா திகழ்கிறது இங்கு நாள்தோறும் 30 நாளேடுகள் வெளியாகின்றன.




## நிர்வாகம்

1953 இல் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பின் படி, நாட்டின் அதிகாரம் செனட் சபைக்கும் பிரதிநிதிகள் சபைக்கும் பிரிந்து செல்கின்றது. 1994 இல் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்புத் திருத்தத்தின் படி நாட்டின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கும் உப ஜனாதிபதிக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தல் ஆறு வருடங்களுக்கு ஒருமுறைநடைபெறுகிறது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அலெக்சாண்டர் குஸ்டாவ் ஐஃபல்

உலகிலுள்ள அதிசயமான கட்டிட நிர்மாணங்களில் 'ஐஃபல் கோபுரம்' முக்கிய இடத்தை வகிக்கின்றது. 985 அடி உயரம் கொண்ட இந்தக் கம்பீரமான தோற்றமுடைய கோபுரமானது, பிரான்ஸின் பெரிஸ் நகரில் மார்ஸ் தோட்டத்தில் அமைந்துள்ளது.

பிரான்ஸியப் புரட்சியின் நூற்றாண்டு விழாவை 1889 ஆம் ஆண்டில் மிகவும் கோலாகலமாக நடத்த பிரான்ஸ் அரசு திட்டமிட்டிருந்தது. அந்த விழாவின் காட்சிக்காக வித்தியாசமான தோற்றத்துடனான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் பிரான்ஸின் கட்டிடக் கலை நிபுணர்களுக்கு மத்தியில் ஏற்பட்டது. அதற்காக அன்று பிரான்ஸிலிருந்த கட்டிடக் கலைஞர்கள் பலரும் பல திட்டங்களை முன்வைத்தனர். இதற்கமைய உலகின் உயரமான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான மாதிரி உருவை வரைபடத்தினூடாக வெளிக்காட்டுவதில் கட்டிட நிர்மாணிப்பாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். கட்டிட நிர்மாணத் திட்டங்களை முன் வைத்தவர்களில் அலெக்சாண்டர் குஸ்டாவ் ஐஃபல் (Alexander Gustave Eiffel) என்பவரும் ஒருவர்.

# அதிசயிக்கத்தக்க ஐஃபல் கோபுரம்

ஐஃபல், அக்காலகட்டத்தில் பிரான்ஸில் மாத்திரமன்றி ஐரோப்பா பூராகவும் ஆபிரிக்கா மற்றும் சீனா போன்ற நாடுகளிலும் சிறந்த கட்டிட நிர்மாணப் பொறியியலாளராகப் பிரசித்தி பெற்றிருந்தார். கோபுரத்தை நிர்மாணிப்பதற்கான அனுமதியை பிரான்ஸ் அரசாங்கம் வழங்கியிருந்த போதும், கட்டிட நிர்மாணிப்புக்கு குத்துமதிப்பாகத் தேவைப்படும் (பிரான்ஸ் பிராங்க் 65 லட்சம்) பணத்தொகையில் சிறு தொகைப் பணத்தையே (பிரான்ஸ் பிராங்க் 15 லட்சம்) அரசாங்கத்தால் தர முடியும் என ஐஃபலுக்கு அறிவிக்கப்பட்டது.

கட்டிட நிர்மாணம் வெற்றியளிக்குமாயின் அதனைப் பார்வையிட வரும் மக்களிடமிருந்து சிறு தொகை கட்டணத்தை அறவிடுவதற்கு அனுமதியளிப்பதாக பிரான்ஸ் அரசு தெரிவித்தது. ஐஃபலைப் பொறுத்தவரையில் இது ஒரு பெரும் சவாலாகவே இருந்தது. எனினும், அவர் அதற்கு மனப்பூர்வமாகச் சம்மதித்தார். சுய அறிவோடும் நிர்மாணத் திறனோடும் தன்னம்பிக்கையோடும் கோபுர நிர்மாணப் பணிகளை 1887, ஜூன் மாதம் ஆரம்பிக்கலானார்.

சூட்சுமமாகத் திட்டமிட்டு 30 கனிஷ்ட பொறியியலாளர்களுடன் ஐஃபல் ஆரம்பக் கட்டிட நிர்மாணப் பணிகளைத் தொடங்கினார். நிலத்திலிருந்து நான்கு தூண்களுடன் மேல்நோக்கி நிர்மாணிக்கப்படத் தொடங்கிய கோபுரத்திற்கு பல்வேறு வகையான, பல்லாயிரக்கணக்கான சிறிய தூண்கள் உருவாக்கப்பட்டன. நிர்மாணப் பணிகளுக்காக அமர்த்தப்பட்ட வேலையாட்கள் 300 ஆக மட்டுப்படுத்தப்பட்டனர். இரண்டு வருடங்களில் கோபுரத்தின் மூன்று மாடிகளை பூரணத்துவப்படுத்த ஐஃபலால் முடிந்தது.




1888 இல் கட்டிட நிர்மாணப்பணிகள் நடைபெறல்

18,000 அளவில் விதம்விதமான இரும்புத் துண்டங்கள், அவற்றை ஒன்றுடனொன்று பொருத்துவதற்காக சுமார் 25 லட்சம் திருகாணிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கோபுரத்தின் மொத்த எடை சுமார் 10,000 டொன் ஆக இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. வேகமாக காற்று வீசும்போது இந்தக் கோபுரமானது 5 அங்குலமளவில் சாயும். இதற்கு மேலே நிர்மாணிக்கப்பட்டுள்ள தொலைக்காட்சி கோபுரத்தின் உயரம் மட்டும் 105.6 அடியிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

– ஜீ நூ

FUNDAY TIMES விஜய் PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE විජය

# அகில இலங்கை கட்டுரைப் போட்டி

**அனுசரணை:- மக்கள் வங்கி**

People's Bank Sisu Udana An outstanding future generation

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் 'விஜய்' அகில இலங்கை கட்டுரைப்போட்டியில் பங்குகொள்ள வருமாறு உங்களை வரவேற்கிறோம். இந்தப் போட்டியில் நாடெங்குமுள்ள நான்கு பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம். கட்டுரைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எந்த மொழியிலும் எழுதப்படலாம்.

**கட்டுரைக்கான தலைப்புக்கள் வருமாறு:**

தரம் 2-3: 'எனது பாடசாலை' எனும் தலைப்பில் 10 வசனங்கள் (சுமார் 100 சொற்கள்)

தரம் 4-5: எனது நாடு (150 சொற்கள்)

தரம் 6-7: நமது சூழலை பாதுகாத்தல் (200 சொற்கள்)

தரம் 8-9: ஒற்றுமையே பலம்

**கட்டுரைகள் அனுப்புவதற்கான முடிவுத் திகதி 18 மே 2008**

கிடைக்கப்படும் கட்டுரைகளில் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி மூலம் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும்10 இறுதிப்போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இறுதிக்கட்டப்போட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று வீதம் 25 நிலையங்களில் நடத்தப்படும்.

தெரிவு செய்யப்பட்ட இறுதிப்போட்டியாளர்கள் குறிப்பிட்ட திகதியன்று அருகிலுள்ள நிலையத்துக்கு வருமாறு கேட்கப்படுவார்கள். அன்றைய தினம் மாவட்ட நிலையங்களில் நடத்தப்படும் போட்டியின் போது கொடுக்கப்படும் புதிய தலைப்பில் குறிப்பிட்ட நேரத்துக்குள் கட்டுரைகள் எழுதி முடிக்கப்பட வேண்டும்.

மத்தியஸ்தர் குழுவொன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களை தெரிவு செய்யும். அவர்களின் முடிவே இறுதியானதாகும்.

**பரிசுகள்**

பரிசுகள்: ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு மொழியிலும் ஐந்து பரிசுகள் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

முதலாவது இடம்: ரூபா 10,000 பணப்பரிசும், சிசு உதான கணக்குக்கு 5,000 ரூபாவும்.

2 ஆம் இடம்: ரூபா 7,000 பணப் பரிசும், சிசு உதான கணக்குக்கு 3,500 ரூபாவும்.

3 ஆம் இடம்: ரூபா 5,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 2,500 ரூபாவும்.

4 ஆம் இடம்: ரூபா 3,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 1500 ரூபாவும்.

5 ஆம் இடம்: ரூபா 2,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 1,000 ரூபாவும்.

**மாவட்ட பரிசுகள்**

மாவட்ட ரீதியில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மொழியிலிருந்தும் சிறந்த வெற்றியாளருக்கு ரூபா 1000 பரிசு.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களுக்கு வெற்றிச் சின்னங்கள் வழங்கப்படும்.

**நற்சான்றிதழ்கள்**

அகில இலங்கை மற்றும் மாவட்ட ரீதியிலான வெற்றியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கூப்பனில் எல்லா முக்கிய விபரங்களையும் நிரப்பி கட்டுரையுடன் இணைத்து எமக்கு அனுப்பி வைக்கவும். மேற்படி, கட்டுரைகள் உங்களின் சுயமுயற்சியால் எழுதப்பட்டது என்பது பெற்றோரால் அல்லது ஆசிரியரால் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

**நிலையங்கள்**

மாவட்ட நிலையங்கள் பற்றிய விபரம் காலக்கிரமத்தில் வெளியிடப்படும்.

FUNDAY TIMES **அகில-இலங்கை கட்டுரைப் போட்டி** விஜய் විජය

பெயர் : ..............................

பிறந்த திகதி : ..............................

முகவரி : ..............................

..............................

தொலைபேசி : ..............................

பாடசாலை : ..............................

மாவட்டம் : ..............................

PEOPLE'S BANK Sisu Udana

விஜய், கட்டுரைப் போட்டி
த.பெ.இல 2037,
கொழும்பு.

அல்லது

விஜய், கட்டுரைப் போட்டி
8, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

மாமி மாலாவுக்கும் மகன் ஆனந்தனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடல் மூலம் சிங்கள வாக்கிய அமைப்புக்கள் சில தருகின்றோம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

ආනන්දන්: ආයුබෝවන් නැන්දේ.
ஆனந்தன்: ஆயுபோவன் நென்தே.
ஆனந்தன்: வணக்கம் மாமி.

මාලා: ආයුබෝවන්.
மாலா: ஆயுபோவன்.
மாலா: வணக்கம்.
එන්න ඇතුළට එන්න.
என்ன அதுளட என்ன.
வாங்க உள்ளே வாங்க.
වාඩිවෙන්න.
வாடிவென்ன.
உட்காருங்கள்.

ආනන්දන්: බොහෝම ස්තුතියි.
ஆனந்தன்: பொஹோம ஸ்தூதிய்.
ஆனந்தன்: மிகவும் நன்றி.

මාලා: ආනන්දන් කොහේ ද යන්නේ ?
மாலா: ஆனந்தன் கொஹேத யன்னே?
மாலா: ஆனந்தன் எங்கே செல்கின்றீர்கள்?

ආනන්දන්: මම කඩයට යනවා.
ஆனந்தன்: மம கடயட யனவா.
ஆனந்தன்: நான் கடைக்குச் செல்கின்றேன்.

මාලා: මොනව ද ගන්න යන්නේ ?
மாலா: மொனவத கன்ன யன்னே?
மாலா: என்ன வாங்கச் செல்கின்றீர்கள்?

ආනන්දන්: හාල්, පිටි, සීනි ගන්න යන්නේ.
ஆனந்தன்: ஹால், பிடி, சீனி கன்ன யன்னே.
ஆனந்தன்: அரிசி, மாவு, சீனி போன்றவை வாங்கச் செல்கின்றேன்.

මාලා: මටත් බඩු ටිකක් ගන්න ඕනේ. අරගෙන එන්න.
மாலா: மடத் படு டிகக் கன்ன ஓனே. அறகென என்ன.
மாலா: எனக்கும் பொருட்கள் கொஞ்சம் வாங்க வேண்டும். வாங்கிக் கொண்டு வாங்க.

ආනන්දන්: හොඳයි. මම අරගෙන එන්නම්.
ஆனந்தன்: ஹொந்தய். மம அறகென என்னம்.
ஆனந்தன்: நல்லது. நான் வாங்கிக் கொண்டு வருகின்றேன்.

මාලා: බොහෝම ස්තුතියි ආනන්දන්.
மாலா: பொஹோம ஸ்தூதிய் ஆனந்தன்.
மாலா: மிகவும் நன்றி ஆனந்தன்.

### අභ්‍යාසය பயிற்சி

வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: வாங்க உள்ளே வாங்க.
එන්න ඇතුළට එන්න.

i. ஆனந்தன் எங்கே செல்கின்றீர்கள்?
ii. நான் கடைக்குச் செல்கின்றேன்.
iii. எனக்கும் கொஞ்சம் பொருட்கள் வேனும்.




### வினா வாக்கியம்/உடன்பாடு வாக்கியம்/எதிர்மறை வாக்கியம்

எதிர்கால தனி வாக்கியங்களில் (Future Simple Tense) காணப்படுகின்ற வினா வாக்கியம், உடன்பாடு வாக்கியம், எதிர்மறை வாக்கியம் முதலான மூன்றையும் ஒன்றுடன் ஒன்று முறையாக ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Will you eat? - நீ சாப்பிடுவாயா? (வினா)
(ஆ) Yes, I will eat - ஆம், நான் சாப்பிடுவேன். (உடன்பாடு)
(இ) No, I won't eat - இல்லை, நான் சாப்பிடமாட்டேன். (எதிர்மறை)
(அ) Will they eat? - அவர்கள் சாப்பிடுவார்களா? (வினா)
(ஆ) Yes, they will eat - ஆம், அவர்கள் சாப்பிடுவார்கள். (உடன்பாடு)
(இ) No, they won't eat - இல்லை, அவர்கள் சாப்பிடமாட்டார்கள். (எதிர்மறை)

✱ மேற்படி வாக்கியங்கள் செயற்படுபொருள் (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன.

(அ) Will you eat bread?
நீ பாண் சாப்பிடுவீயா? (வினா)
(ஆ) Yes, I will eat bread.
ஆம், நான் பாண் சாப்பிடுவேன். (உடன்பாடு)
(இ) No, I won't eat bread.
இல்லை, நான் பாண் சாப்பிடமாட்டேன். (எதிர்மறை)
(அ) Will they eat rice?
அவர்கள் சோறு சாப்பிடுவார்களா? (வினா)
(ஆ) Yes, they will eat rice.
ஆம், அவர்கள் சோறு சாப்பிடுவார்கள். (உடன்பாடு)
(இ) No, they won't eat rice.
இல்லை, அவர்கள் சோறு சாப்பிடமாட்டார்கள். (எதிர்மறை)
(அ) Will these boys eat bread?
இந்த ஆண் பிள்ளைகள் பாண் சாப்பிடுவார்களா? (வினா)
(ஆ) Yes, these boys will eat bread.
ஆம், இந்த ஆண் பிள்ளைகள் பாண் சாப்பிடுவார்கள். (உடன்பாடு)
(இ) No, these boys won't eat bread.
இல்லை, இந்த ஆண் பிள்ளைகள் பாண் சாப்பிடமாட்டார்கள். (எதிர்மறை)

✱ He, She, It முதலான பிரதிப்பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) Will he eat? - அவன் சாப்பிடுவானா? (வினா) ஆண்பால்.
(ஆ) Yes, he will eat - ஆம், அவன் சாப்பிடுவான். (உடன்பாடு)
(இ) No, he won't eat - இல்லை, அவன் சாப்பிடமாட்டான். (எதிர்மறை)
(அ) Will she eat? - அவள் சாப்பிடுவாளா? (வினா) - பெண்பால்
(ஆ) Yes, she will eat - ஆம், அவள் சாப்பிடுவாள். (உடன்பாடு)
(இ) No, she won't eat - இல்லை, அவள் சாப்பிடமாட்டாள். (எதிர்மறை)
(அ) Will it eat? - அது சாப்பிடுமா? (வினா)
(ஆ) Yes, it will eat - ஆம் அது சாப்பிடும். (உடன்பாடு)
(இ) No, it won't eat - இல்லை அது சாப்பிடமாட்டாது. (எதிர்மறை)

✱ மேற்படி வாக்கியங்கள் செயற்படுபொருள் (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன.

(அ) Will he eat bread for dinner?
அவன் இரவுணவாக பாண் சாப்பிடுவானா? (வினா)
(ஆ) Yes, he will eat bread for dinner.
ஆம், அவன் இரவுணவாக பாண் சாப்பிடுவான். (உடன்பாடு)
(இ) No, he won't eat bread for dinner.
இல்லை, அவன் இரவுணவாக பாண் சாப்பிடமாட்டான். (எதிர்மறை)

குறிப்பு: Will not என்பதன் சுருக்கமே Won't என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

# விருது போட்டியில் விருந்து...!



தாய்லாந்தில்அரச விருதிற்கான யானைகளின் 'போலோ' போட்டிகள் சியெங் நகரத்திற்கு அண்டிய பகுதியொன்றில் நடைபெற்றது. இதில் 28 யானைகள் கலந்து கொண்டன. போட்டிகளின் முடிவில் யானைகளுக்கென விசேட பழவகை விருந்தும் வழங்கப்பட்டது. அதனையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

# எல்லாம் நாய்களுக்காக.....



கம்பிக் கூண்டுக்குள் மிருகங்களுக்குப் பதிலாக மனிதர்கள் உள்ளனரே என்று யோசிக்கின்றீர்களா? மிருகங்களின் நலன் கருதித்தான் மனிதர்கள் இப்படிக் கம்பிக்கூண்டுக்குள் உள்ளனர்.

சீனாவில் மிருகவதையை எதிர்க்கின்ற சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள் சிலரே இவ்வாறு தமது அடையாள எதிர்ப்பை காட்டியுள்ளனர். மிருகங்களுக்கு எதிரான வதைகள் நிறுத்தப்படவேண்டும் என்று கோரி 'செங்ஸி' என்ற நகரத்திலேயே மேற்படி வித்தியாசமான போராட்டம் நடைபெற்றுள்ளது.

குறிப்பாக, நாய் இறைச்சியை உண்பதில் சில சீனர்கள் ஆர்வம் காட்டி வருவதை தடுப்பதற்கும் செல்லப்பிராணிகளாக வளர்க்கப்படுகின்ற நாய்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற சித்திர வதைகளை தடுப்பதற்காகவுமே குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

# வீதியிலே ஸ்பைடர் மேன்....



'ஸ்பைடர் மேன் (Spider Man) எனப்படும் 'சிலந்தி மனிதன்' மிகவும் பிரபலமான கதாபாத்திரமாகும். அமெரிக்க திரைப்படங்களிலும், கார்ட்டூன் திரைப்படங்களிலும் 'ஸ்பைடர் மேன்' அலாதியான வீரனாக காட்டப்படுகின்றது. 'ஸ்பைடர் மேன்' என்றாலே சிறியோர் பெரியோர் அனைவருக்கும் மிகவும் விருப்பம்தான். இங்கு படத்தில் நீங்கள் காணுகின்ற 'ஸ்பைடர் மேன்' சற்று வித்தியாசமானவர். 'ஸ்பைடர் மேன்' போன்ற ஆடைகளை அணிந்த இந்த மனிதரை அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் வீதியோரத்தில் காணலாம்.

இப்பகுதிகளில் செல்கின்ற உல்லாசப் பிரயாணிகளின் கவனத்தை ஈர்த்து,அவர்களை தன்னுடன் புகைப்படம் எடுக்கச் செய்து பணம் சம்பாதித்துக் கொள்வதற்காகத்தான் இவர் இப்படி 'ஸ்பைடர் மேன்' வேஷம் போட்டு வீதி உலா வருகின்றார்.

# மத்திய கிழக்கு சமாதான மாநாட்டை மொஸ்கோவில் நடத்துமாறு கோரிக்கை



'மத்திய கிழக்கு சமாதான மாநாடு' கூடிய விரைவில் ரஷ்யாவின் 'மொஸ்கோ' நகரில் நடத்தப்பட வேண்டும் என்று பாலஸ்தீனத் தலைவர் மொஹமட் அப்பாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது இஸ்ரேலுடன் நடத்தப்படுகின்ற பேச்சுவார்த்தைகள் மந்த கெதியிலேயே நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மொஸ்கோ நகரில் சமாதான மாநாடொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் சமாதான பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அது ஓர் உந்து சக்தியாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மொஸ்கோ நகரிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் மாணவர்களுக்கு மத்தியில் நிகழ்த்திய உரையொன்றிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்-பாலஸ்தீனம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் கடைசியாக கடந்த வருடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் தலைமையில் அமெரிக்காவில் நடைபெற்றன. இதன்படி அடுத்த கட்ட மாநாடு ஜூன் மாதம் நடைபெறும் என கூறப்படுகின்ற போதிலும் அதற்கு இன்னமும் திகதி குறிக்கப்படவில்லை.

இஸ்ரேல்-பாலஸ்தீன சமாதானப் பேச்சுவார்த்தை ஏழு வருடங்களாகத் தடைப்பட்டுப் பின்னர் கடந்த வருடமே மீண்டும் நடைபெற்றது. இந்த வருடத்திலும் அதன் தொடர்ச்சி நடைபெற வேண்டும் என்பதே சமாதான விரும்பிகளின் கருத்தாக உள்ளது.

# கொண்டலிஸா ரைஸ் ஈராக்கிற்கு திடீர் விஜயம்



அமெரிக்காவின் இராஜாங்க செயலாளர் கொண்டலிஸா ரைஸ் ஈராக்கிற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஷியா முஸ்லிம் அமைப்பின் தலைவர் மொக்தார் அல்சதார் போர் தொடுப்பதாக எச்சரித்துள்ளதையடுத்தே கொண்டலிஸா ரைஸ் மேற்படி விஜயத்தை ஈராக்கிற்கு மேற்கொண்டுள்ளார்.

ஈராக்கின் பக்தாத் நகரில் தங்கியிருந்த அவர், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, ஈராக்கில் பாதுகாப்பு நிலவரம் மேம்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு ஈராக்கிய தலைவர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒற்றுமையடைந்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். பஹ்ரேன், குவைத் ஆகிய நாடுகளுக்கு செல்லும் வழியிலேயே கொண்டலிஸா ரைஸ் ஈராக்கிற்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் போராட்டம் நடத்தும் ஷியா முஸ்லிம் அமைப்பினருக்கு ஈரான் அமைப்புக்களே பயிற்சிகளை வழங்குவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ள அதேவேளை கொண்டலிஸா ரைஸின் ஈராக் விஜயத்தை தாம் எதிர்ப்பதாக ஷியா முஸ்லிம் அமைப்பு தெரிவித்துள்ளது. ஈராக் அரசாங்கம் அமெரிக்காவின் கைப்பொம்மையாக செயற்பட்டு வருவதாகக் கூறி அரசாங்கத்திற்கும், அமெரிக்கப் படையினருக்கும் எதிராக ஷியா முஸ்லிம்கள் போராட்டம் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 149

**கேள்வி:** பாலஸ்தீனத் தலைவரின் பெயர் என்ன?

**சரியான விடை**..........................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 149,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

**போட்டி இல - 147 இன் சரியான விடை: மொர்ஷன் டிஸ்னிசிராய்**

**பரிசு பெறுவோர்**

செல்வராசா சாகித்தியா,
294 மத்திய வீதி,திருகோணமலை.

எம்.நௌரின் கான்,
37, கஹட்டபிட்டிய வீதி,
மிரிஸ்வத்த, பலாங்கொடை.

எம்.ஸில்மி,
75/75 மதுராபுர,தெனிப்பிட்டிய, வெலிகம.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரினங்களுக்கு விஞ்ஞானப் பெயரிடப்பட்ட விதம்

உலகில் உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆய்வு செய்தவர்கள் பல சிக்கல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்தனர். காரணம், அக்காலத்தில் உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்தவர்கள் இப்பிரபஞ்சத்தில் தாம் கண்ட உயிருள்ள, உயிரற்றவைகளை தாம் விரும்பியபடி பெயர் வைத்து அழைத்து வந்தமையாகும். உதாரணமாக, ஒரே தாவரத்தை பல்வேறு பெயர்களில் அழைத்தனர். அதேபோல் ஒரே பெயரில் வெவ்வேறு தாவரங்களை அழைத்தனர்.

இம்முரண்பாடுகளை இனங்கண்டு அவற்றை முறையாக பாகுபடுத்த வேண்டும் என, உலகிற்கு முதலாவதாக வெளிப்படுத்தியவர் கிரேக்க தத்துவஞானி அரிஸ்டோட்டில் அவர்களே. எனினும், அது தெளிவான பாகுபடுத்தலாக அமையவில்லை.

அதன்பின் இந்த எண்ணத்தை ஆங்கிலேயரான ஜோன் ரே என்பவர் முன்வைத்தார். அவர் அரிஸ்டோட்டிலை விட முன்னேற்றகரமான பல விடயங்களை முன்வைத்தார். எனினும், இன்று பயன்படுத்தப்படும் உயிரினங்கள் தொடர்பான இயற்கையான பாகுபாட்டை முதன்முதலில் அறிமுகம் செய்தவர் கெரோலஸ் லினீயஸ் (1707-1778) என்பவராவார். அவர் ஐரோப்பாவின் சுவீடன் நாட்டில் பிறந்த ஒரு விஞ்ஞானி ஆவார்.



ஜோன் ரே

### உயிரினப் பாகுபாடு

கெரோலஸ் லினீயஸ், இயற்கை விதிகளை 1758 இல் Systema Naturae எனும் நூலின் மூலம் வெளியிட்டு, உயிரினப் பாகுபாட்டை அறிமுகப்படுத்தினார். அதன்படி, உலகிலுள்ள உயிரினங்களை இரு பிரதான இராச்சியங்களாகப் பிரித்தார். அவை:

1. விலங்கு இராச்சியம்
2. தாவர இராச்சியம்

மேலும் ஒரு இராச்சியத்திலுள்ள உயிரினங்கள் மீண்டும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. உலகில் வாழும் அனைத்து விலங்குகளும் விலங்கு இராச்சியத்தைச் சேர்ந்ததாகும். சகல தாவரங்களும் தாவர இராச்சியத்தைச் சேர்ந்ததாகும். Phylum வம்சம் இவ்விலங்குகளின் முதலாவது பிரிவாகும். ஒவ்வொரு வம்சத்திலும் இணைத்துக் கொள்ளப்படும் விலங்குகள் அந்தந்த வம்சத்திற்குரிய பொது அடையாளங்களைக் கொண்டிருக்கும். உதாரணமாக, நவீனகால மனிதனுக்கும் கொரில்லாக்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையைக் கூறலாம். அதன்படி அவை கோர்டேடா (Chordata) வம்சத்தைச் சார்ந்தவையாகும். முள்ளந்தண்டுள்ள உயிரினங்கள் அனைத்தும் இப்பிரிவைச் சார்ந்தவை.

எனினும், உருவத்தில் கொரில்லாவை விட அதிக வித்தியாசமான தோற்றமுடைய தவளை கூட 'கோர்டேடா' வம்சத்தைச் சார்ந்ததாக இருந்தபோதும்அவற்றிற்கிடையிலான வேறுபாட்டை மேலும் ஆழமாக அறிந்து கொள்ள உதவுவது அடுத்த பாகுபாடாகும். அதனை வகுப்பு Class என அழைக்கின்றனர். மனிதனும் கொரில்லாவும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவை. அது 'மெமலியா' (Mammalia) எனும் வகுப்பாகும். முலையூட்டிகள் (பாலூட்டிகள்) இந்த வகுப்பைச் சார்ந்தவை. எனினும், தவளைகள் இந்த வகுப்பைச் சார்ந்தவையல்ல. அவை 'எம்ஃபிபியன்' எனும் வகுப்பைச் சார்ந்தவை. இதனை 'ஈரூடக வாழிகள்' எனப் பொதுவாக அழைப்பர்.இவை வாழ்க்கை வட்டத்தின் ஆரம்பத்தை நீரிலும் நிறையுடலிப் பருவத்தை நீரிலும் நிலத்திலும் கழிக்கக் கூடிய விலங்கினமாகும். இந்தஅடிப்படையில் விலங்கினங்களைப் பாகுபடுத்திக் கொண்டு செல்லும் போது லினீயஸ் எதிர்பார்க் காதளவுக்கு விலங்கினங் களுக்கிடையிலான சமத்துவத்தையும் வித்தியாசங்களையும் இனங்கண்டு கொள்ளக்கூடியதாகவும் அதனூடாக விலங்கின பரிணாமத்தை இலகுவில் அடையாளங் காணக்கூடியதாகவும் இருந்தது.

தாவரமொன்றையோ விலங்கொன்றையோ இனங்காட்டும்போது அதனை இரட்டைப்பதப் பெயரிலேயே அழைக்கப்பட வேண்டும் என்பது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட விதிமுறையாகும். மேலும், அது Italic எழுத்தில் எழுதப்படவும் வேண்டும்.

### மனிதன்



| | |
|---|---|
| Kingdom | - *Animalia* |
| இராச்சியம் | - எனிமலியா |
| Phylum | - *Chordata* |
| குடும்பம் | - கோர்டேடா |
| Class | - *Mammalia* |
| வகுப்பு | - மெமலியா |
| Order | - *Primates* |
| சாதி | - ப்ரைமேட்ஸ் |
| Genus | - *Homo* |
| கணம் | - ஹோமோ |
| Species | - *Homo Sapiens* |
| இனம் | - ஹோமோ சேப்பியன்ஸ் |

### கொரில்லா



| | |
|---|---|
| Kingdom | - *Animalia* |
| இராச்சியம் | - எனிமலியா |
| Phylum | - *Chordata* |
| குடும்பம் | - கோர்டேடா |
| Class | - *Mammalia* |
| வகுப்பு | - மெமலியா |
| Order | - *Primates* |
| சாதி | - ப்ரைமேட்ஸ் |
| Genus | - *Gorilla* |
| கணம் | - கொரில்லா |
| Species | - *Gorilla gorilla* |
| இனம் | - கொரில்லா கொரில்லா |

### ஒரே தாவரத்திற்கு பல்வேறு பெயர்கள்

தமிழ் - தேங்காய்
சிங்களம் - பொல்
ஆங்கிலம் - கொக்கனட்


எனினும், அதன் உயிரியல் பெயர் 'கொகோஸ் நுசிபெரா' *(Cocous nusipera)* என்பது பொதுவாக பாவனையிலுள்ளது.

உயிரினம்
- விலங்கு இராச்சியம்
- தாவர இராச்சியம்

### கெரோலஸ் லினீயஸ் (1707-1778)



**1707, மே மாதம் 3 ஆம் திகதி பிறந்த இவர், 1735 இல் Systema Naturae எனும் நூலையும் 1736 இல் (Fundamental Botanica) 'உயிரியல் விஞ்ஞானத்தின் அடிப்படைவாதம்' எனும் நூலையும் Species Plantarum எனும் நூலை 1753 இலும் வெளியிட்டார். இவர், 1778 ஜனவரி 10 இல் உயிர் துறந்தார்.**





லினீயஸ் பரிசோதனைக்குப் பயன்படுத்திய தாவரங்களும் அவர் வசித்த வீடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரியின் சமயோசிதம்

இரவு நேரம். அந்தக் கடுகதி பஸ்ஸின் அனைத்து இருக்கைகளும் பயணிகளால் நிரம்பியிருந்தன. நள்ளிரவு 12 மணி.

பயணிகள் அனைவரும் கண்ணயர்ந்து இருக்க, பஸ்ஸின் பெரும் பாலான விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன. ஓட்டுநரிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டு வந்தார் நடத்துனர். அப்போது திடீரென்று நடத்துன ரின் பின்புற இருக்கையில் இருந்து ஒருவரும், ஓட்டுனரின் முன்புற இருக் கையின் அருகிலிந்து ஒருவரும் எழுந்து வந்தனர். நடத்துனர், ஓட்டுனர் இருவரையும் நெருங்கி அவர்கள் கழுத்தில் கத்தியை வைத்தனர்.

அதேநேரம், ஒருவன் "எல்லோரும் கொஞ்சம் கண்ணைத் திறங்க....." என்றபடி தன் கையிலிருந்த துணிப்பையைத் தூக்கிக்காட்டினான். பையி னுள் ஏதோ உருண்டையாக இருப்பதுபோல் தோன்றியது.

"இதோ.... இந்தப் பைக்குள்ளே வெடிகுண்டு இருக்கு யாரும் சத்தம் போடாதீங்க. உடனே நீங்க போட்டிருக்கிற நகை, கடிகாரம், நீங்க வச்சிருக் கிற பணத்தை எல்லாம் எடுங்க. இல்லைன்னா குண்டை எறிஞ்சுடுவேன்" என்று கத்தினான்.



நடத்துனரும், ஓட்டுனரும் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்த னர். இவற்றைப் பார்த்த குழந்தைகள் பயந்து அழ ஆரம்பித்தன.

பஸ்ஸின் கடைசி இருக்கையில் உறங்கிக் கொண்டிருந்த அமீர்பாய், திடுக்கிட்டுக் கண்விழித்தார். பயணிகளை கொள்ளைக்காரர்கள் மிரட்டிக் கொண்டிருப்பதையும், ஓட்டுனர், நடத்துனர் கழுத்துகளில் இருவர் கத் தியை வைத்து அழுத்தியபடி நிற்பதையும் கண்டார். தனது காலடியில் இருந்த பையின் சிப்பை கால் விரல்களால் அழுத்தி, மெதுவாகத் திறந்தார்.

நிமிடத்தில் கீழே குனிந்தவர், பையில் இருந்தவற்றைக் கொத்தாக எடுத்து அந்த ஆசாமிகளை நோக்கி வீசி எறிந்தார். ஓட்டுனரின் அருகி லும்,நடத்துனரின் இருக்கை மற்றும் பஸ் எங்கும் ஆங்காங்கே பாம்புகள் சிதறி விழுந்தன.

பாம்பைப் பார்த்த ஓட்டுனர் தடுமாற, சாலையோர மதகின் மீது மோதி நின்றது பஸ். ஏற்கனவே மிரட்டல் காரணமாக அவர் வேகத்தை வெகு வாகக் குறைத்திருந்ததால் பெரிதாக விபத்து நேரவில்லை.

அதேநேரம், எதிரில் வாகனங்களில் வந்தவர்கள், ஏதோ களேபரம் ஆகி யிருக்கிறது என்று நினைத்து டக்டக்கென்று வாகனங்களை நிறுத்தினர். பஸ்ஸை நோக்கி ஓடிவந்தனர்.

கூட்டம் சேர்வதைப் பார்த்த கொள்ளைக்காரர்கள், இனியும் நாம் இங்கி ருந்தால் ஆபத்து என்று பஸ்ஸிலிருந்து குதித்து, விழுந்து எழுந்து ஓடி இரு ளில் மறைந்தனர். ஓட்டுனர் உடனடியாக அனைத்து விளக்குகளையும் எரியவிட, 'பளிச்'சென்று பஸ்ஸில் ஒளி வெள்ளம் பரவியது.

உள்ளே சிதறிக் கிடப்பவை பிளாஸ்டிக் பாம்புகள் என்பதை அறிந்த பயணிகள், அச்சம் தணிந்து ஆச்சரியப்பட்டனர். பொம்மை வியாபாரி அமீர்பாயின் கணநேர சமயோசித உத்தியால் தமது நகை, பணம் காப்பாற் றப்பட்டதையும், கொள்ளையர்களால் யாருக்கும் ஆபத்து ஏற்படாமல் தவிர்க்கப்பட்டதையும் உணர்ந்து நிம்மதிப் பெருமூச்சுவிட்டனர். பயணி கள் அமீர்பாயை கைகுலுக்கிப் பாராட்டினர்.

நடந்தது அனைத்தையும் விசாரித்து அறிந்த அங்கு வந்த வாகன ஓட்டி கள், குலுங்கக் குலுங்கச் சிரித்தபடி அமீர்பாயை பாராட்டிவிட்டு தங்கள் வாகனங்களை நோக்கி நடந்தனர்.

தங்கள் பங்குக்கு அமீர்பாயை பாராட்டிய ஓட்டுனரும், நடத்துனரும் சிரித்தபடி பஸ்ஸை நகர்த்தினர்.




சொல்லிவைத்த மாதிரி, பட குக்கப்பல் இந்து மா சமுத்திரத்தின் ஜலசந்திக்குள் பிரவேசித்தது. பல் தேசிய கப்பல்களும் அங்கே அணிவகுத்துப் பயணித்தன.

மாலுமி சின்வா, கப்பல்களுடன் தொடர்பை ஏற்படுத்தினாள். அவ ளின் படகுக்கப்பலில் கொடிக்கம் பம் முறிந்து விழுந்ததனால் கப்ப லில் கொடி ஏற்றப்படவில்லை. இதனால், அது கடல் கொள்ளை யர்களின் கப்பலாக இருக்குமோ என்ற அச்சத்தினாலே சின்வாவின் அழைப்புக்களுக்கு உரிய பதில் கிடைக்கவில்லை.

விஷயத்தை சின்வா ஊகித்தாள். சில கப்பல்களுக்கு அவசரச் செய்தி முறைகளைப் பிரயோகித் தாள். பயனில்லை. ஓ.எஸ்.ஓ என்ற சமிக்ஞை வெளிச்சத்தைப் பாய்ச்சினாள். அதற்கும் பயன் கிடைக்கவில்லை. வெகு தொலை விலே ரஷ்ய நாட்டுக் கொடியுடன் கப்பலொன்று தென்பட்டது. பல் தேச மொழிகளிலே பாண்டித்தி யம் பெற்றிருந்த மாலுமி சின்வா ரஷ்ய மொழியிலே அக்கப்பலு டன் தொடர்பு கொண்டாள்.

உங்களது கப்பலிலே தேசிய கொடியையோ அல்லது அபாய அறிவிப்புக்கொடியையோ காண வில்லையே... ஏன் என்பதுதான் அந்த ரஷ்யக் கப்பலிலிருந்து கேட் கப்பட்ட முதல் கேள்வியாகும். சின்வா விஷயங்களை விலாவரி யாக விபரித்தாள். பின்னர் அந்த ரஷ்யக் கப்பல் 'சயரன்' கூவியபடி அதே இடத்தில் நங்கூரம் பாய்ச்சி யது. அக்கப்பலிலிருந்த பாது காப்பு அதிகாரிகள் சிலர் நிலைமை யைக் கண்டறிய சிறிய படகுகளில் சின்வாவின் படகுக் கப்பலை நோக்கி வந்தனர்.

கப்பலுக்கு நடந்த அனர்த்தங்களைக் கேட்டு அதிர்ச்சிய டைந்தனர். கப்பல் மாலுமி சிமித் மற்றும் அதிலே பய ணித்து அகாலமரணமடைந்த பயணிகள் மற்றும் கைதிகளுக்காக தலைகுனிந்து அஞ்சலி செலுத்தி னர். பின்னர் படகிலிருந்த அனை வருக்கும் ரஷ்யக் கப்பல் கப்டன் விருந்துபசாரம் கொடுத்தான்.

***ரஷ்ய கப்பலின் மாலுமி கள் படகுக்கப்பலுக்கு நேர்ந்த அனர்த்தங்களை அறிந்து அதிர்ச்சி அடைந் ததுடன் அகால மரண மடைந்த பயணிகள் மற் றும் கைதிகளுக்காக தலைகுனிந்து அஞ்சலி செலுத்தினர்***

படகுக்கப்பல் பயணிகள் சிலர் அந்த ரஷ்யக் கப்பலிலே வர விரும்பி அனுமதி கோரியபோ தும், அது நிராகரிக்கப்பட்டது. யுத் தக்கைதிகள் இருப்பதால் அவர் களின் நலன்களைக் கவனிக்க வேண்டும் அவர்களை பாதுகாப் பாக உரிய இடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது, பட குக்கப்பலிலுள்ள ஊழியர்களின் தலையாய கடமை என்று சொல்லி அவர்களது வேண்டு கோள் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

ரஷ்யக்கப்பல், போகும் திசை யிலே குறுக்கிட்ட வேறு நாட்டுக் கப்பல்களுக்கெல்லாம் திசைமா றிய இப்படகுக்கப்பல் பற்றிய விபரங்களை ரஷ்யக்கப்பல் மாலுமி அறிவித்தான். அவர் களுக்கு முடியுமானவரை உதவி களைச் செய்யுமாறும் வேண்டிக் கொண்டான்.

அந்த வேண்டுதலுக்கிசைய பல கப்பல்களிலிருந்து படகுக்கப்பலுக்குத் தொடர்புகள் ஏற்பட்டன. தேவையான பொருட்களெல்லாம் அந்தந்தக் கப்பல்களிலுள்ள படகுகள், ஹெலிகொப்டர்கள் மூலமாக வந்து குவிந்த வண்ண மிருந்தன. இப்போது பாய் மரப்படகுக்கப்பலில் சந்தோஷம் நிலவியது.

(தொடரும்....)

## தேடி வந்த உதவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரப்படுத்தலில் முரளி பின்தங்கிய நிலையில்

இலங்கையின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் ஒருநாள் போட்டிகளுக்கான சர்வதேச கிரிக்கெட் தரப்படுத்தல் பட்டியலில் முதல் பத்து பேர்களின் வரிசையில் இடம் பிடிக்கத் தவறியுள்ளார். பத்து வருடங்களின் பின்னர் தற்போதுதான் முரளிதரன் இத்தகைய பின்னடைவிற்கு ஆளாகியுள்ளார். 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் இதுவரையில் பத்து வருடங்களுக்கும் மேல் தரப்படுத்தல் பட்டியலில் முதல் பத்துப் பேரில் ஒருவராக இடம்பிடித்துக் கொண்டிருந்தார் முரளிதரன்.

மேற்கிந்திய தீவுகளுடனான போட்டியில் முரளிதரன் கலந்து கொள்ளாமையினாலேயே முரளிக்கு இந்நிலைமை ஏற்பட்டதாகவும் கருதப்படுகின்றது. இதனால், கடந்த பட்டியல்களில் பதினொராவது இடத்தில் இருந்த பாகிஸ்தானின் சஹிட் அஃப்ரிடி பத்தாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

எனினும், டெஸ்ட் போட்டிகளின் தரப்படுத்தலில் முரளிதரன் முதலாவது இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி ஒருநாள் போட்டிகளில் முரளிதரன் மீண்டும் முன்னேற்றம் காண்பதற்கு ஜூன் மாதம் வரை காத்திருக்க வேண்டும். ஜூன் 24 ஆம் திகதி பாகிஸ்தானில் ஆசியக் கிண்ண போட்டிகள் நடைபெறவுள்ளமையால் அப்போட்டிகளின் மூலமே முரளிதரன் மீண்டும் மீளெழ முடியும் என்று கருதப்படுகின்றது.

இதுவரை 305 ஒருநாள் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள முரளிதரன் 464 விக்கெட்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### ஒருநாள் தரப்படுத்தல் பட்டியல்

| இடம் | பெயர் | நாடு | புள்ளி |
|---|---|---|---|
| 01 | வட்டோரி | நியூஸிலாந்து | 790 |
| 02 | நெதன்பிரக்கன் | அவுஸ்திரேலியா | 770 |
| 03 | ஷேன்பொன்ட் | நியூஸிலாந்து | 736 |
| 04 | சமிந்தவாஸ் | இலங்கை | 683 |
| 05 | கயில் மில்ஸ் | நியூஸிலாந்து | 683 |
| 06 | அந்தாநெல் | தெ.ஆபிரிக்கா | 683 |
| 07 | டொரன்பவெல் | தே.இ.தீவுகள் | 680 |
| 08 | கெரம் டேலர் | மே.இ.தீவுகள் | 678 |
| 09 | பிரெட்லீ | அவுஸ்திரேலியா | 671 |
| 10 | சஹிட் அஃப்ரிடி | பாகிஸ்தான் | 662 |

### டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியல்

| இடம் | பெயர் | நாடு | புள்ளி |
|---|---|---|---|
| 01 | கிரேம் ஸ்மித் | தெ.ஆபிரிக்கா | 792 |
| 02 | சச்சின்டென்டுல்கர் | இந்தியா | 777 |
| 03 | ரிக்கிபொன்டிங் | அவுஸ்திரேலியா | 770 |
| 04 | மொஹமட் யூசுப் | பாகிஸ்தான் | 763 |
| 05 | சந்தர்போள் | மே.இ.தீவுகள் | 740 |
| 06 | மெத்யூஹேடன் | அவுஸ்திரேலியா | 740 |
| 07 | மைக் ஹஸீ | அவுஸ்திரேலியா | 736 |
| 08 | கெவின் பீட்டர்சன் | இங்கிலாந்து | 735 |
| 09 | டிவிலியஸ் | தெ.ஆபிரிக்கா | 733 |
| 10 | டோனி | இந்தியா | 728 |

விஜய் ஸ்போர்ட்ஸ்

வி.ரெட்லி ஹெரிசன்

# ஐ.பி.எல் போட்டிகளில் புதிய எதிர்பார்ப்பு





இந்தியாவில் முதற்தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிக்கு எதிர்பார்த்ததையும் விட அதிக வரவேற்பு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரங்கம் நிறைந்த ரசிகர்களின் அலைமோதல், தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமைகள் வழங்கப்பட்டமை தொடர்பிலும் இந்திய கிரிக்கெட் சபை மிகுந்த திருப்தியில் இருப்பதாக தெரியவருகின்றது. அது மட்டுமன்றி போட்டிகளில் கலந்து கொள்கின்ற வெளிநாட்டு வீரர்களும் பூரண திருப்தியுடனேயே இருக்கின்றனர்.

இத்தகைய ஒரு பின்னணியில் இப்போட்டிகளில் புதியதோர் எதிர்பார்ப்பொன்றும் ரசிகர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதாவது, ஐ.பி.எல் போட்டியொன்றில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியைச் சேர்ந்த மெக்கலம் 73 பந்துகளில் 158 ஓட்டங்களைக் குவித்தமையால் அவரது சாதனையை இதே போட்டிகளில் யாராவது முறியடிப்பார்களா? என்பதே ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்பார்ப்பாகும். இது 20 ஓவர்கள் கொண்ட போட்டியொன்றில் ஒருவர் எடுத்த அதிகூடிய ஓட்ட சாதனையாகும்.

53 பந்துகளில் மெக்கலம் சதத்தைப் பெற்றமையும் சிறப்பம்சமாகும்.

இத்தகைய நிலையில் மெக்கலம் நிகழ்த்தியிருக்கும் சாதனையை முறியடிப்பேன் என்று பாகிஸ்தான் வீரர் சஹிட் அஃப்ரிடி தெரிவித்துள்ளதையடுத்து, ஏனைய முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் மத்தியிலும் இதே உணர்வு ஏற்பட்டிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

எனவே, இதுவே ரசிகர்கள் மத்தியில் புதியதோர் எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருப்பதுடன் போட்டிகள் முடியும் வரையில் இந்த சாதனை இலக்கு அமுலில் இருக்கும் என்பதால் போட்டிக்கு அது நல்லதோர் சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியிருப்பதும் மறுக்க முடியாததே.

# ஜானி சதுரங்கனியின் தண்டனையில் மாற்றம் வருமா?



சர்வதேச மெய்வல்லுனர் சங்கத்தின் இரண்டு வருட கால போட்டித்தடைக்கு உள்ளாகியிருக்கும் ஜானி சத்துரங்கனியின் தண்டனை விதிப்பில் சில மாற்றங்களை கொண்டு வருவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஜானி மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14 ஆம் திகதியை அவரது தண்டனைக் காலத்தின் ஆரம்பமாக கணிக்குமாறு கூறியே விளையாட்டுத்துறை அமைச்சர் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார். அவரது கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஜானி சத்துரங்கனியின் தடைக்காலம் இந்த வருடம் செப்டெம்பர் 14 ஆம் திகதியுடன் முடிவடையும். இருப்பினும் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தினை உட்கொண்டார் என்ற குற்றச்சாட்டை விசாரித்த குழு இந்த மாதம் (ஏப்ரல்) 14 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் வகையிலேயே தண்டனையை அறிவித்துள்ளது. அதன்படி பார்த்தால் அவர் மீதான தண்டனைக் காலம் 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதியே முடிவடையும்.

ஜானி சதுரங்கனி மீதான குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டமையால் அவர் பெற்ற வெற்றிகள் யாவும் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மே தின வரலாறு

**ஐக்கிய அமெரிக்காவின் சிக்காக்கோ நகர தொழிலாளர்கள் தம் உயிரைத் தியாகம் செய்தும் இரத்தம் சிந்தியும் உருவாக்கிய மே தினம், உலகின் சகல நாடுகளிலும் சர்வதேச தொழிலாளர் தினமாக மே, 1 ஆம் திகதி நினைவு கூரப்படுகிறது. இலங்கையிலும் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பிருந்தே மே தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.**

## அடிமைகளாக வழிநடத்தப்பட்ட தொழிலாளர்கள்

ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாக 14, 15 நூற்றாண்டுகளில் நகரங்களில் கைத்தொழிற்சாலைகள் பெருகின. எனினும், வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் தொழிலாளர்களை அடிமைகளைப் போல் நடத்தினர். ஒரு நாளைக்கு 15 முதல் 16 மணிநேரம் வேலை வாங்கியதோடு அவர்களுக்கு சிறு தொகைப் பணத்தையே சம்பளமாகக் கொடுத்தனர்.

வருடத்தின் 365 நாட்களும் ஓய்வின்றி வேலை வாங்கினர். பாண் துண்டொன்றும் ஒரு கோப்பை தேநீரும் கஞ்சியும் மாத்திரமே அவர்களுக்கு உணவாகக் கொடுக்கப்பட்டது. தவிர, அவர்களின் ஆரோக்கிய வாழ்விற்கும்தொழில் வசதிகளுக்கும் தேவையான வசதிகள் வழங்கப்படவில்லை.

## தொழிலாளர் வர்க்கம் உருவாதல்

தொடர்ந்தும் மனிதாபிமானமற்ற ரீதியாக தொழிற் சுரண்டல்களுக்கு முகம் கொடுத்து வந்த தொழிலாளர்கள் தமது உரிமைகளை ஓரளவுக்கேனும் வென்றெடுக்கும் நோக்கில் சிறியளவில் ஊர்வலங்களை நடத்தி வந்தனர். இதன் பிரதிபலனாக 1842 இல் பிரித்தானிய நாடாளுமன்றத்தினால் தொழிலாளர்களின் தேவைகளை ஆராய்வதற்கென ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. எனினும், அதனால் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், பல தொழிலாளர் வர்க்கங்கள் உருவாகின. அத்துடன் உலக தொழிலாளர் சங்கமும் (IWA) உருவானது. இதனையடுத்து தொழிலாளர்கள் ஒன்றிணையலாயினர்.

## தொழிலாளர்களின் முதலாவது கோரிக்கை

அக்காலத்தில் வரையறையற்ற ரீதியில் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்பட்டமையால் தொழிலாளர்கள் இதற்கெதிராக போராட அணி திரண்டனர். அதேவேளை, இந்நிலையைக் கட்டுப்படுத்த 'எட்டு மணி நேர வேலை' என்ற கோரிக்கையை முன் வைத்தனர். இதன் விளைவாக, 1848 பெப்ரவரி மாதம் பிரான்சில் ஏற்பட்ட புரட்சியில் பிரான்சிய தொழிலாளர்களின் '12 மணி நேர வேலை' என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து 1856 இல் அவுஸ்திரேலியாவில் '8 மணி நேர வேலை' ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலுள்ள தொழிலாளர்களும் 8 மணி நேர வேலை கோரி பல போராட்டங்களை நடத்தலாயினர். இதில், 1861-1865 காலகட்டத்தில் அமெரிக்க தொழிலாளர்களின் போராட்டம், பெரிஸ் கொமியூனிடி சம்பந்தமான ஆர்ப்பாட்டம், ஒல்லாந்து, பெல்ஜியம், இங்கிலாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் ஏற்பட்ட தொழிலாளர் போராட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

1875 இல் பென்சில்வேனியா சுரங்கத் தொழிலாளர்கள் 8 மணிநேர வேலை கோரி நடத்திய வேலைநிறுத்தப் போராட்டத்தையடுத்து அமெரிக்க தொழிலாளர்களின் போராட்ட சக்தியும் பலமும் மென்மேலும் வலுப்பெற்றது.

1877 இல் அமெரிக்க புகையிரத தொழிலாளர்களும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களும் இந்த வேலை நிறுத்தப் போராட்ட நடவடிக்கைகளில் ஒன்றிணைந்தனர். எனினும், 1882 ஆம் ஆண்டில் அமெரிக்க தொழிலாளர் வர்க்கம் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்கியது.

1884 செப்டெம்பர் மாதம் அமெரிக்க தொழிலாளர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தில், 1886 முதல் ஒரு நாளைக்கு 8 மணிநேர வேலைத்திட்டத்தை சட்டரீதியாக்க வேண்டுமென்ற தொழிலாளர்களின் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

## தொழிலாளர்களுக்கென்று ஒரு தினம்

1886 இல் நாளொன்றுக்கு 8 மணி நேர வேலை என்ற கோரிக்கையோடு தொழிலாளர்களின் மேலும் பல கோரிக்கைகளையும் முன்வைத்து ஐக்கிய அமெரிக்காவின் சிக்காக்கோ நகரத்தில் முக்கிய நிகழ்வொன்று நடந்தது. இதன் போது அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறித்த ஒரு நாள் விடுமுறைத் தினமாக வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.







இதற்கு ஆதரவு தெரிவித்து 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமது வேலையைப் புறக்கணித்தவர்களாக 1886 மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதனை ஆளும் வர்க்கமானது பொலிஸாரைக் கொண்டு தாக்குதல் நடத்தி தடுக்க முற்பட்டது. இதில் 5 தொழிலாளர்கள் காயமுற்றனர். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டார். தொழிற்சங்கக் காரியாலயம் தீக்கிரையானது. இந்த அசம்பாவிதங்களை அடுத்து தொழிலாளர்கள் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதனிடையே அமெரிக்க தொழிலாளர் சங்கம் மே முதலாம் திகதியை விடுமுறை தினமாகவும் அத்தினத்தில் ஊர்வலம் நடத்தவும் அங்கீகாரம் பெற்றுள்ளதைப் போன்றே சர்வதேச மட்டத்தில் இது அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று 'பெரிஸ் சர்வதேச கொமியூனிஸ்ட்' இயக்கத்தினால் இரண்டாவது சர்வதேச மாநாட்டில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கை தொழில் வழங்கும் சம்மேளனங்களால் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து 1890 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மே, 1 ஆம் திகதி சர்வதேச தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

## சர்வதேச தொழிலாளர் தினம்


மே முதலாம் திகதி அனைத்து உலக நாடுகளிலும் சர்வதேச விடுமுறைத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தில் தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடியவர்கள் கௌரவிக்கப்படுவதோடு புரட்சியின் போது உயிர் நீத்தவர்களும் நினைவு கூரப்படுகின்றனர். இம்முறை அனுஷ்டிக்கப்படவுள்ள மே தினமானது 118 ஆவது மே தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் மே தினம்

இலங்கையில் முதன்முதலாக கொழும்பில் திரு.ஏ.ஈ.குணசிங்க தலைமையில் மே தினம் கொண்டாடப்பட்டது. எனினும், 1956 மே மாதம் 1 ஆம் திகதிதான் மே தினம் ஒரு பொது விடுமுறை தினமாக அங்கீகரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 165 — 5




### மேலிருந்து கீழ்

01. நான்கு வரிகளையுடைய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு.
02. 'வல்லவனுக்கு ...... உம் ஆயுதம்' என்பது பழமொழி.
03. இந்தியாவில் பாயும் நதியொன்று.
05. பாதை என்றும் அர்த்தப்படும்.
06. நிறை-ஒத்தகருத்துச் சொல்.
07. நிராசை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
08. இரண்டு குழுக்களாகப் பிரிந்து குதிரையில் அமர்ந்தவாறு கோல் மற்றும் சிறிய பந்து என்பனவற்றைப் பயன்படுத்தி விளையாடப்படும் விளையாட்டு.

### இடமிருந்து வலம்

01. தம்பதெனியாவின் பழைய பெயர்.
04. மணலும் மணல் சார்ந்த வறண்ட பிரதேசமும்.
05. லுணுவிலையில் இதன் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது.
06. உரம்-ஒத்தகருத்துச் சொல்.
07. மனிதனின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்று.
09. முத்தமிழில் ஒன்று.
10. நோர்வேயின் தலைநகரம்.

### குறுக்கெழுத்துப்போட்டி 162 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. மகரந்தம்
02. சங்கமம்
03. ஆழி
07. திருடி
09. புவி

**இடமிருந்து வலம்**

01. மஞ்சரி
04. மொழி
05. ரசிகன்
06. நதி
08. தழும்பு
10. விநாடி

குறுக்கெழுத்துப் போட்டி -165
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

எஸ்.வினோதர்ஷன், தரம் - 8A,
தலவாக்கலை த.ம.வித்., தலவாக்கலை.

பஸ்மில் பௌஷான்,
ஓட்டமாவடி-01.

ஜே.வினோப்பிரியா, தரம் - 7,
புனித அந்தோனியார் ம.வித்., மூதூர்.

### அன்பு மாணவர்களே!

**இது உங்கள் கவனத்திற்கு.....**

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

## 1

**(A) பந்தியிலுள்ள சொற்களுக்குள் எழுத்துக்கள் குழம்பியுள்ளன. அவற்றை இனங்கண்டு பந்தியை ஒழுங்கமைக்க**

The paomnnehal pweor of the hmuan mnid. Aoccdrnig to a rscheearch at cmabrigde uinervtisy, it deosn't mttaer in waht oredr the ltteers in a wrod are, the olny iprmoatnt tihng is taht the frist and lsat ltteer be in the rghit pclae. The rset can be a taoal mses and you can sitll raed it wouthit porbelm. Tihs is bcuseae the huamn mnid deos not raed ervey lteter by istlef, but the wrod as a wlohe.

**(B) பிழைகளைத் திருத்தி எழுதுங்கள்**

1. காள்பந்து - ..........................
2. அணார்தம் - ..........................
3. ஏராழம் - ..........................
4. பரிசோதணை - ..........................
5. வறுடப்பிரப்பு - ..........................
6. நிற்பந்தம் - ..........................

## கணக்குப் புதிர் — 2

(அ) அரிசி கொள்வனவு நிலையமொன்றுக்கு அரிசி வாங்க வருபவர்களுக்கு ஒரு நாளைக்கு 2 கிலோகிராம் அரிசி மாத்திரமே வழங்கப்படுகின்றது. குறித்த தொகையிலும் மேலதிகமாக வாங்க வேண்டின் மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் விற்பனை விலையிலிருந்து இரு மடங்கு விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படும்.

* அரிசி கொள்வனவு நிலையத்திற்கு குறித்த தினத்தில் 25 பேர் அரிசி வாங்குவதற்காக வந்தனர். இவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட அரிசியின் மொத்த நிறை யாது? ..............................

** 1 கிலோ கிராம் அரிசியின் விலை 80.00 ரூபா எனில், அன்றைய தினம் கிடைத்த மொத்தத் தொகை யாது? ..................................

*** மறுதினம், அரிசி வாங்க வந்த 14 பேரில் ஒருவர் 4 கிலோ கிராம் அரிசியும் இன்னொருவர் 3 கிலோ கிராம் அரிசியும் வாங்கினார்கள்.

a) 4 கிலோ கிராம் அரிசி வாங்கியவருக்கு எவ்வளவு பணம் செலவாகியது? ................................

b) 3 கிலோ கிராம் அரிசி வாங்கியவருக்கு எவ்வளவு பணம் செலவாகியது? ................................





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.05.07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 154**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## மத்தியில் உள்ள வட்டங்கள் ஒரே அளவுடையனவா? — 4



## வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 3





## அறிவுக்கு விருந்து - 151 விடைகள்

**போட்டி: 01**

3 வெள்ளை நிற முக்கோணிகள்

**போட்டி: 02**

முதல் படத்தில் - சிங்கமொன்றின் தலை
இரண்டாவது படத்தில் - கொரில்லாவொன்றின் தலை

**போட்டி: 03**

(A)
1. கணக்கீடு 2. நிர்க்கதி 3. இல்லத்தரசி
4. பகலவன் 5. விகடகவி

(B)
1. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.
2. கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
3. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்.
4. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்.
5. ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்.
6. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.

**போட்டி: 04**

1. 12 2. 21 3. 8 4. 4

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 151 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ரிஸ்மினா முஸம்மில், தரம் - 8B,
அல்-அஸ்ஹர் மு.ம.வித்., ஹெம்மாதகம.

**போட்டி: 02**
ஏ.பீ.எம்.அஸீம், தரம் - 5B,
அல்-அஷ்றக் தே.பா., நிந்தவூர்.

**போட்டி: 03**
எஸ்.வைஷ்ணவி, தரம் - 10C,
ஸ்ரீ சண்முகா இ.ம.கல்., திருகோணமலை.

**போட்டி: 04**
செ.டிலானா, தரம் - 4Y,
மட்/வி.ம.ம.வித்., கல்லடி.

**போட்டி: 05** (குறு.போ-162)
பா.றிஷானி, தரம் - 7B,
கஹட்டகஸ்திகிலிய மு.ம.வித்., அநுராதபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேம்ஸ் நதியில் பழங்காலத்து பொம்மைகள்

பழங்காலத்து விளையாட்டுப் பொருட்களின் களஞ்சியசாலை போல திகழ்கிறது இங்கிலாந்தின் 'தேம்ஸ்' நதி. இந்த நதியிலிருந்து குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்களான சிறிய அளவிலான பீரங்கி, துவக்கு மற்றும் உலோகத்திலான பல்வேறு விளையாட்டுப் பொருட்கள் கிடைத்துள்ளன.

இது எவ்வாறு எனில் உலோகப் பொருள் பரிசோதனை செய்யும் கருவியுடன் (Metal Detectors) செல்பவர்கள் இவற்றைக் கண்டெடுத்து வருகின்றனர். இவர்கள் கண்டெடுத்துள்ள பல்வேறு வித விளையாட்டுப் பொருட்கள் 1200 ஆம் ஆண்டு காலப்பகுதியைச் சேர்ந்தவை என்று தெரியவந்துள்ளது. இந்தக் காலப்பகுதியில் இப்படிப்பட்ட விளையாட்டுப் பொருட்களை வைத்து குழந்தைகள் விளையாடி இருக்கமாட்டார்கள் என்றே முன்னர் நினைக்கப்பட்டது. இந்த விளையாட்டுப் பொருட்கள் கண்

வெள்ளீயத்தாலான விளையாட்டு நாற்காலியொன்று



டெடுக்கப்பட்டதிலிருந்து வரலாற்றாசிரியர்கள் தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் சில பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு மிகுந்த அர்ப்பணிப்புடையவர்களாக இருந்துள்ளனர் என்றும் அவர்களுக்கு எல்லாச் செல்வங்களையும் வழங்கியுள்ளனர் என்றும் லண்டன் அருங்காட்சியகத்தைச் சேர்ந்த ஹஸல் போரிஸ்த் கூறியுள்ளார்.


'தேம்ஸ்' நதியிலிருந்து பெறப்பட்ட சில விளையாட்டுப் பொருட்கள் அபூர்வமானவை. இங்கு கிடைக்கப்பெற்ற பொரும்பாலான விளையாட்டுப் பொருட்கள் கல்லீயம் (Pewter) என்னும் உலோகத்தினாலேயே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது விரைவில் அழிவடையக் கூடியதுதான் எனினும் 'தேம்ஸ்' நதிக்கரையில் உள்ள சேற்று நிலமானது சிறிதளவு பிராணவாயுவைக் கொண்டிருப்பதன் காரணமாக இவை அழிவடையாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டு காலத்துக்கு முன்னர் குழந்தைகள் எப்படிப்பட்ட விளையாட்டுப் பொருட்களை வைத்து விளையாடினர் என்பதை விளக்கும் வகையில் (Buried Treasure) 'புதைக்கப்பட்ட செல்வம்' என்னும் பெயரில் கண்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது.

-ராஜா

## வரலாற்றிலிருந்து..

## மாபெரும் கிளர்ச்சி



**1.** ஹொமெம் தளபதியார் தண்டனை கொடுக்க வேண்டியவர்களுக்கு தண்டனை கொடுத்தார். இக்காலத்தில் புகழ் பெற்ற கவிஞர் ஒருவர் இருந்தார். அவர்தான் அழகிய வண்ண முகவெட்டி என்பவர். அவர் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றினார். தொன் ஜெரனிமோ அழகியவண்ண எனும் பெயரிலேயே வாழ்ந்தார்.


**2.** இக்கவிஞர் வருமான வரிசேகரிப்போருக்கு உதவி செய்தார். இத்தளபதி கீழ்நாட்டு மக்கள் மீது விருப்பம் உடையவராக இருந்தார். அவர்கள் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ வழிசமைத்துக் கொடுத்தார். ஹொமெம் தளபதி ஒரு வருடமும் ஆறு மாதங்களும் இலங்கையில் பதவி வகித்தார். பின் விலகிச் சென்றார்.

**3.** அவருக்குப் பின் நுனோ அல்வாரிஸ் பெரெய்ரா என்பவர் இலங்கையில் பிரதம தளபதியாக நியமிக்கப்பட்டார். முன்னைய பிரதம தளபதி போலவே கட்டளைகளை நிறைவேற்ற அவர் பணிக்கப்பட்டார். அதனைச் சிறந்த முறையில் கொண்டு செல்லப் புதிய தளபதி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். இருமுறை மலையகத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டார். இம்முறை போர்த்துக்கேயர் கைவிட்டுச் செல்வதற்கு முதலியார்களின் சூழ்ச்சியே காரணமாகும்.

**4.** அதனை பிரதம தளபதி அறிந்து கொண்டார். உடனடியாக அந்த முயற்சியை நிறுத்தினார். அதன் பின் பலன மலைகளுடாக படை அணியை அனுப்பினார். அந்தப் படையணி எவ்வித இடையூறுமின்றி பயணித்தது. அவ்வாறு இரண்டு வாரங்கள் கழிந்தன. மீண்டும் வேஉட, கடவத்தை வழியாக மல்வானைக்கு வந்தனர். இதற்கிடையில் சப்ரகமுவ மற்றும் இரு கோறளையில் கிளர்ச்சிகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

**5.** நுனோ தளபதி அதனை அறிந்து உடனே பட்டையினரை அனுப்பினார். அப்படையினர் அங்கு சென்று கிராமங்களுக்கு தீ வைத்து கிளர்ச்சிக்காரர்களையும் பயமுறுத்தினர். மீண்டும் கொழும்புக்கு வந்தனர். எனினும், மீண்டும் கிளர்ச்சி ஆரம்பித்தது. இது போர்த்துக்கேயருக்கெதிரான மிகப்பெரிய கிளர்ச்சியாகும்.

**6.** அக்காலத்தில் ரைகம் கோரளையில் பத்தினிஹாமி எனும் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரின் மகன் கிறிஸ்தவ மதத்தை தழுவிக் கொண்டான். களுத்துறைக் கத்தோலிக்க பங்குத்தந்தை ஒருவரின் சேவையாளனாக இருந்தான். பின் அங்கிருந்து விலகினான். தளபதியின் விதானைப் பதவி வழங்கப்பட்டது.



**7.** அப்பதவியின் காரணமாக அவனுக்கு நாட்டில் நன்கு பழகக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அதன் மூலம் சீதாவாக்கை அரசர்களைப் பற்றியும் தகவல்களைப் பெற்றுக் கொண்டான். அவன் போர்த்துக்கேயருக்கு சேவை செய்தாலும் அவர்களிடம் நல்லவனாக நடித்தாலும் அவர்களிடம் எப்பொழுதும் உள்மனதில் குரோதம் இருந்தது. திடீரென இந்த விதானை காணாமல் போனான். அவன் சந்நியாசி வேடம் பூண்டான்.



**8.** யாழ்ப்பாணத்திற்கு செல்பவர்களுடன் சேர்ந்து அநுராதபுரத்திற்கு சென்றான். அங்கு சென்று சீதாவாக்கை இராச்சியத்தின் நிக்கபிட்டிய பண்டார நான்தான் எனக் கூறினான்.

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA
SPECIAL COLLECTION




மும்பாய்

# உலகில் சனத்தொகை அதிகமுள்ள நகரங்கள்

அதிகரித்து வரும் உலக சனத்தொகை குறித்த விடயங்களை 'விஜய்' இதழில் வழங்கியிருந்தோம். அந்த வகையில் சனத்தொகைப் பெருக்கம் அதிகம் உள்ள நகரங்களில் முதல் பதினொரு இடத்தை வகிக்கின்ற நாடுகளின் விபரங்கள் அண்மைய ஆய்வொன்றின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கமைய அதிக சனத்தொகையை கொண்டுள்ள நகரம் தென்கொரியாவின் ஸோல் நகரமாகும் என்று தெரியவந்துள்ளது. இந்த நகரத்தில் ஒரு கோடியே இரண்டு லட்சத்து முப்பத்தோராயிரம் (102,31,000) மக்கள் வசிப்பது கணிப்புக்களின் மூலம் தெரியவந்துள்ளது.

இரண்டாவது இடம் பிரேஸிலின்-சுவோ பௌலோ நகரத்திற்கு கிடைக்கின்றது. இங்கு ஒரு கோடியே ஒன்பதாயிரம் மக்கள் வசிக்கின்றனர்.

மூன்றாவது இடம் இந்தியாவின் மும்பாய் நகரத்திற்கு கிடைக்கின்றது இங்கு 99,25,000 மக்கள் வசிக்கின்றனர்.



ஸோல்



ஜகார்த்தா

குறிப்பாக, சனத்தொகைப் பெருக்கம் அதிகம் உள்ள நகரங்களில் ஆசிய நாடுகளே முன்னணி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய நாடுகளில் கிராமப்புறங்களில் போதிய வசதிகள் இன்மையால் அநேகமானோர் நகர்ப்புறங்களை நோக்கி வருவதனாலேயே இவ்வாறு நகரப்பகுதிகளில் சனத்தொகைப் பெருக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. மேற்படி ஆய்வுகளின்படி முதல் பதினொரு இடங்களைப் பெறுகின்ற நகரங்களின் பட்டியல் வருமாறு:-

| நகரம் | நாடு | சனத்தொகை |
|---|---|---|
| 01. ஸோல் | தென்கொரியா | 102,31,000 |
| 02. சாவேபௌலோ | பிரேஸில் | 100,09,000 |
| 03. மும்பாய் | இந்தியா | 99,25,000 |
| 04. ஜகார்த்தா | இந்தோனேஷியா | 93,73,00 |
| 05. கராச்சி | பாகிஸ்தான் | 93,39,000 |
| 06. மொஸ்கோ | ரஷ்யா | 82,97,000 |
| 07. ஸ்தாம்புல் | துருக்கி | 82,50,000 |
| 08. மெக்ஸிக்கோ | மெக்ஸிக்கோ | 82,35,000 |
| 09. பீஜிங் | சீனா | 82,14,000 |
| 10. டோக்கியோ | ஜப்பான் | 81,00,000 |
| 11. நியூயோர்க் | அமெரிக்கா | 80,08,000 |




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 30, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org